பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 17 ஞாயிற்றுக்கிழமை (03-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:341

## திருமலையில் புலிகள் அறுவர் கடற்படையால் நேற்று கைது

திருகோணமலை,நவ.3

திருகோணமலை கடற்பகுதியில் படகில் பயணம்செய்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அறுவர் நேற்று கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலி உறுப்பினர்களான கலையரசன், கலாபரன், நவா, கிருபா, டயதாஸ், சுகுமார் ஆகியோரே அதிகாலை 2.30 மணியளவில் கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்கள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புதிய வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியருக்கு சம்பள உயர்வு

கொழும்பு,நவ.3

எதிர்வரும் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் ஐக்கிய தேசிய முன்னணியின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு கணிசமான சம்பள உயர்வு வழங்கப்படும்.

- இப்படிக் கூறினார் நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி.

நிதியமைச்சில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலே இத்தகவலை அவர் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வறுமை ஒழிக்கும் அபிவிருத்தித் திட்டமாக அமையவுள்ள புதிய வரவு - செலவுத் திட்டம், கூடுதலான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### வெளிநாடுகளின் முன்னுதாரணங்களைப் பரிசீலித்து

# தீர்வுக்கான அடிப்படை விடயங்களை

# ஆராய அரசியல் விவகார உப குழு!

## இருதரப்புகளும் இணைந்து அமைப்பதற்கு இணக்கம்

- பாங்கொக்கிலிருந்து என்.வித்தியாதரன் -

பாங்கொக்,நவம்பர்3

**இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படை விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக அரசும் புலிகளும் இணைந்து அரசியல் விவகார உபகுழு ஒன்றை அமைப்பதற்கு இணக்கம் கண்டிருக்கின்றனர்.**

**அரசு தரப்புக்கும் புலிகள் தரப்புக்குமிடையில் தாய்லாந்தில் நடைபெற்றுவரும் இரண்டாவது சுற்று சமாதானப் பேச்சுக்களின் மூன்றாம் நாளான நேற்று மாலைஅமர்வின்போது இது குறித்து தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.**

பேச்சுக்களில் பங்குபற்றும் இரு தரப்பினரும் சேர்ந்து புனர்நிர்மாணம், புனரமைப்பு முதலிய அபிவிருத்தி பணிகளைக் கையாள ஓர் உபகுழுவையும் -

உயர் பாதுகாப்பு வலயங்கள், மீள்குடியமர்வு, மிதிவெடி அகற்றல் முதலிய மனிதாபிமானப் பணிகளைக் கையாள ஓர் உபகுழுவையும் - அமைப்பதற்கு ஏற்கனவே இணக்கம் கண்டிருந்தனர்.

அபிவிருத்திக்கான உபகுழு, மனிதாபிமானப் பணிக்கான உபகுழு ஆகியவற்றுக்கு மேலதிகமாக அரசியல் விடயங்களை கையாள்வதற்கான மூன்றாவது உபகுழுவை அமைப்பதற்கு தற்போது இணக்கம் (16ஆம் பக்கம் பார்க்க)



தாய்லாந்தின் நாக்கென் பாத்தெம் நகரில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்று வரும் ஹோட்டலைச் சுற்றி தாய்லாந்து விசேட பொலிஸார் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். அவர்களின் ரோந்து நடவடிக்கையை படத்தில் காண்கிறீர்கள்.

### புனரமைப்பு, புனர்நிர்மாணப் பணிகளுக்கென

# வெளிநாடுகள் வழங்கும் நிதி இனி நேரடியாக அரசுக்கு கிடைக்காது!

## தெரிவு செய்யப்படும் ஒரு நாடு ஊடாக தேவைக்கு ஏற்ப வழங்கப்படும்

பாங்கொக்,நவ.3

வடக்கு - கிழக்கு புனரமைப்பு, புனர்நிர்மாணப் பணிகளுக்கு என வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் நிதி இலங்கை அரசுக்கோ, அதன் மத்திய வங்கிக்கோ நேரடியாக வராது. அந்த நிதியைப் பெற்று, செலவிடுவதற்கான வழிமுறைகள் தொடர்பாக வேறு புதிய நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

தாய்லாந்தில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் இரண்டாவது சுற்று சமாதானப் பேச்சுகளில் இது தொடர்பான இணக்கம் காணப்பட்டிருப்பதாக நம்பகரமாக அறியவந்தது.

வடக்கு - கிழக்கு புனரமைப்புப் பணிகளுக்கென அரசுத்தரப்புப் பிரதிநிதிகளையும் புலிகளின் பிரதிநிதிகளையும் கொண்ட விசேட கூட்டுச் செயலணி ஒன்றை அமைக்க தாய்லாந்தின் சட்டாஹிப் நகரில் நடந்த முதற்சுற்று பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டிருந்தது தெரிந்ததே.

அந்த விசேட செயலணியின் பெயரை மாற்றுவதற்கும், அதில் இடம்பெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை மாற்றுவதற்கும் இங்கு நாக்கென் பாத்தெம் நகரின்

(15ஆம் பக்கம் பார்க்க)

## உயர்பாதுகாப்பு வலயம், மீள்குடியமர்வு குறித்து ஆராய அரசு-புலிகள் கூட்டுக்குழு

### இருதரப்பிலிருந்தும் 19 பேர் இடம்பெறுவர்

பாங்கொக்,நவ.3

உயர் பாதுகாப்பு வலயம், மீள்குடியமர்வு மற்றும் கண்ணிவெடிகளை அகற்றுதல் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்கென அரசுத்தரப்பும் புலிகள் தரப்பும் சேர்ந்து அமைக்கவிருக்கும் கூட்டுக்குழுவில் மொத்தம் 19 பேர் இடம்பெறுவர்.

தாய்லாந்து சமாதானப் பேச்சுக்களில் இலங்கை அரசுத் தரப்பில் பங்குபற்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இத்தகவலை நேற்று நண்பகல் பத்திரிகையாளர்களுக்கு வெளியிட்டார்.

அரசுத் தரப்பில் 9பேரும் புலிகள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புனரமைப்புக்கான உபகுழு கிளிநொச்சியில் இயங்கும்

பாங்கொக்,நவ.3

வடக்கு - கிழக்கு புனரமைப்புக்குப் பொறுப்பாக அமையவிருக்கும் - சமாதானப் பேச்சுத் தரப்புகளின் - உபகுழுவின் தலைமையகம் கிளிநொச்சியில் அமையவிருக்கின்றது.

இலங்கை அரசுத் தரப்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தின் நாக்கென்பாத்தெம் நகரில் நடைபெற்று வரும் பேச்சுக்களில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறியவருகின்றது.

இந்த உப குழுவில் புலிகள் தரப்பில் நால்வரும், அரசுத் தரப்பில் இரண்டு முஸ்லிம்கள் உட்பட நால்வரும் இடம்பெறுவர் என்பது ஏற்கனவே தெரியவந்துள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



நேற்றைய பேச்சுக்களின் பின்னர்
அரசு - புலிகள் தரப்புக் குழுக்களின் தலைவர்கள்...



நேற்றுமுன்தினம் நடந்த பேச்சுக்களின்பின் தாய்லாந்து றோஸ் கார்டின் ஹோட்டலின் நடைபாதையில் புலிகள் தரப்புப் பிரமுகர்கள்.

# நீதித்துறையின் நடவடிக்கைகள் சமாதான நம்பிக்கையை குலைக்கும்

## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.3

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை எட்டும் முகமாக சமாதான முயற்சிகள் முன்னேற்றகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இந்த அமைதியான சூழலில் அரசியல் மற்றும் நீதித் துறையைச் சேர்ந்த சிங்கள இனவாதிகளின் பிற்போக்குத் தனமான செயற்பாடுகள் சமாதானப் பேச்சுக் குறித்து மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையினை இழக்க வைக்கும்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் விதித்த 200வருட சிறைத்தண்டனை குறித்தும் பேரவை விசனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து விவரித்த அறிக்கையில் பேரவை மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொழும்பு மேல்நீதிமன்றத் தீர்ப்பு விடயம் தொடர்பாக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ள கருத்து அரசதரப்புத் தலைவர்களின் பொறுப்பற்ற போக்கினை வெளிக்காட்டுகின்றது.

தமிழ் மக்களை அறிவிலிளாக்கருதி தனது கருத்தை அவர் வெளியிட்டுள்ளதாக அமைகின்றது.

நீதிமன்றம் வெளியிட்டுள்ள கருத்து அரச வெளியிட்ட கருத்தாக அமையாது; அரசுக்கும் நீதிமன்றத்திறகும் தொடர்பில்லை எனவும் அது நீதிமன்றத்தின் தன்னிச்சையான தீர்ப்பு எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

ஒரு நாட்டின் ஜனநாயகத்தினை பாதுகாக்கும் பிரதான தூண்களில் ஒன்று சட்டத்துறை. சட்டத்துறையும் அரசும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. இவை அரசினதும் சட்டத்துறையினதும் செயற்பாடுகள் ஒன்றுக்கொன்று ஆதாரமானவை. உண்மை இவ்வாறு இருக்க சட்டத்துறைக்கும் அரசுக்கும் சம்பந்தம் இல்லை என அரச தரப்புப் பிரதிநிதிகள் தெரிவிப்பது பேச்சு தொடர்பாக அரசு கொண்டிருக்கின்ற பொய்யான நிலைப்பாட்டினையே காட்டுகின்றது.

தமிழ் மக்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிகளை வழி நடத்திவரும் தலைவர் வே.பிரபாகரன் தமிழினத்தின் உயிர்நாடி. தமிழ் மக்களுக்கு ஒரு நிம்மதியான வாழ்வையும் தீர்வையும் தேடித்தரப்போகும் எமது தேசியத்தலைவர் மீது சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்றுவரும் இந்தச் சூழலில் உச்ச நீதிமன்றம் வெளியிட்டுள்ள-தீர்ப்பு பேச்சு மூலமான சமாதானத் தீர்வைப் பாதிக்கும். அதேவேளை யுத்தத்தின் மூலமே எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வழி வகைகளை மீண்டும் தேர்ந்தெடுக்கவேண்டிய நிலைக்கு அது எங்களைத் தள்ளும்.

தமிழ்மக்கள் மீது மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் மேற்கொண்டு வந்த இன அழிப்பு யுத்தத்திலிருந்து தமிழ் மக்களை விடுவித்து பாதுகாக்கும் ஒரு தற்காப்புப் போரினையே - விடுதலைப் போரினையே - தமிழீழ தேசியத் தலைவர் மேற்கொண்டு வருகின்றார். இதனால் தமிழ் மக்களின் வாழ்வும் வளமும் தொடர்ந்தும் அழிக்கப்படுவது தடுக்கப்பட்டது.

இதேவேளை -

அரசினது ஆக்கிரமிப்பு யுத்தத்தினால் அறுபதாயிரத்துக்கு மேற்பட்ட விலை மதிக்கமுடியாத அப்பாவி உயிர்கள் பலியாகின. ஓலைக் குடிசை முதல் தமிழ் மக்களின் அருஞ்சொத்தாக விளங்கிய யாழ்.நூலகம் உள்ளிட்ட பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான தமிழர் சொத்துக்கள் மண்ணோடு மண்ணாக்கப்பட்டது. தமிழ்ப் பெண்கள் வல்லுறவுக்குட்படுத் தப்பட்டார்கள். விலைமதிக்க முடியாத தமிழர்களின் சுதந்திரம் அடியோடு அழிந்துபோனது. இவை அனைத்தும் கடந்தகால அரச தலைமைகளினால் முன்னின்று திட்டமிட்டு நடத்தப்பட்டவை. அப்படிப்பட்ட கொடியவர்களுக்கு என்ன தண்டனை வழங்குவது?

இவ்வாறு சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும் வகையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகள் எல்லாம் அரசின் கட்டுப்பாட்டுக்கு பணியாத அரச படைகளாலும், சந்திரிகா தலைமையிலான ஒரு கும்பலாலும் மேற்கொள்வதாகக் காரணங்களைக் கூறி அரசு இவற்றை வீணே கடத்துவது தொடர்ந்து வரும் காலத்தின் பாதகமான சூழ்நிலைகளையே உருவாக்கும்.

எமது பிரச்சினைக்கு பிரதமர் தலைமையிலான அரசு ஆரோக்கியமான தீர்வை தரக்கூடிய வல்லமை இல்லாவிட்டால் தமக்கு நிம்மதியான எதிர்காலத்தை பெற்றுத்தரும் தனித் தமிழீழம் நோக்கிய பயணத்தைப் புலிகள் தொடங்கவேண்டும் என மக்கள் நிர்ப்பந்திக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். எனவே அரசுத் தரப்பு தமது பக்க நிலைமையை சுமுகமாகக் கையாண்டு பேச்சு மூலமாகத் தீர்வை விசுவாசமாக முன்னெடுக்கவேண்டும். தனது உள்வீட்டுப் பிரச்சினையை தீர்த்து வைக்க இலாயக்கற்ற அரசு தமிழ் மக்களின் பிரச்சினையை எப்படித் தீர்க்கப் போகின்றது என்ற பலமான சந்தேகம் இன்னமும் எம்மைப் பீடித்து நிற்கின்றது. எனவே அரசு மிகவும் பொறுப்பான முறையில் தனது நகர்வுகளை மேற்கொள்வது சிறந்ததாக அமையும் - என்றுள்ளது. (ம)

# ஈ.பி.டி.பி. உறுப்பினர் வாள்வெட்டில் காயம்

யாழ்ப்பாணம்,நவ.3

ஈ.பி.டி.பியின் தென்மராட்சிப் பிரதேசப் பொறுப்பாளர் சூசைமுத்து அலெக்ஸாண்டர் சாள்ஸ் (வயது-37) நேற்றுமுன்தினம் வெள்ளி இரவு 11மணியளவில் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

இவருடைய இரண்டு கால்களும் முழங்கால்களுக்குக் கீழே பலத்த காயமடைந்துள்ளன.

வதிரி, அல்வாய் தெற்கு தம்பி ஓடை என்ற இடத்தில் உள்ள வீடொன்றில் இவர் கதைத்துக்கொண்டிருந்தபோது வீட்டினுள் திடீரென நுழைந்த இனந்தெரியாத நால்வர் இவரைத் தாக்கி வாளால் வெட்டினர் என்றும் -

பின்னர் வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இவரது மோட்டார் சைக்கிளையும் எடுத்துக்கொண்டு அவர்கள் தலைமறைவாகி விட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த அவர் நேற்றுக் காலை 7மணியளவில் மந்திகை ஆதார வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இவர் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-8-173)

# இன்றுமுதல் குடாநாட்டில் சமாதான வாரம் அனுஷ்டிப்பு

யாழ்.மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினால் இன்றுமுதல் சமாதான வாரம் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மனித முன்னேற்ற நடுநிலையத்தின் ஆதரவில் சமாதான நிகழ்ச்சித் திட்டம் ஒன்று ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் இன்று தொடக்கம் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை வரை சமாதான வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

கியூடெக் இயக்குநர் அருட்தந்தை சி.ஜி.ஜெயக்குமார் அடிகளார் தலைமையில் இன்று யாழ்.மரியன்னை பேராலயத்தில் சமாதானக் கொடி ஏற்றப்பட்டு சமாதானம் வேண்டி பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

தொடர்ந்து திங்கட்கிழமை யாழ்.புனித ஆரோக்கியநாதர் ஆலயத்திலும் புதன்கிழமை யாழ்.புனித செபஸ்தியார் ஆலயத்திலும் வெள்ளிக்கிழமை யாழ்.புனித கார்மேல் அன்னை ஆலயத்திலும் சமாதானம் வேண்டி - சமாதானக் கருத்துக்களை முன்வைத்து பூசைகள் இடம்பெறும்.

சனிக்கிழமை யாழ்.மரியன்னை பேராலயத்தில் 'உன்னிடத்தில் சமாதானம் என்னிடத்தில் சமாதானம்' என்னும் பொருளில் நடைபெறும் வழிபாட்டுடன் சமாதான் வாரம் நிறைவு பெறும்.

இதேவேளை - 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அனைவருக்குமான சமாதான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றும் நடைபெறும்.

7ஆம் திகதி வியாழக்கிழமை யாழ் நகரின் அனைத்து கோயில்களிலும் உள்ள திருப்பாலத்துவ சபைச் சிறுவர்கள் ஒன்றுசேர்ந்து நாட்டின் சமாதானத்துக்காக வேண்டுதல்செய்வர். (எ-12)

# மீசாலை, மந்துவில் குடும்பங்கள் மறியலைக் கைவிட இணக்கம்!

யாழ்ப்பாணம்,நவ.3

தென்மராட்சியில் மீசாலை வடக்கு, மந்துவில் கிழக்கு ஆகிய பகுதிகளில் உள்ள 60 வீடுகளில் இருந்து படையினர் வெளியேறவேண்டும் என்று கோரி அப்பகுதி மக்களால் தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன் மேற்கொள்ளப்பட்ட மறியல் போராட்டம் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிபர் ஆகியோரின் உறுதிமொழியை அடுத்துக் கைவிடப்பட்டுள்ளது.

கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இரு நாள்கள் நடைபெற்ற போராட்டம் விடுமுறை நாள்களின் பின்னர் மீண்டும் நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமைமுதல் நடைபெற இருந்தது.

நேற்று யாழ்.செயலகத்தில் அரச அதிபர் மற்றும் எம்.பிக்களுடன் போராட்டத்தை நடத்தி வந்த செயற்பாட்டுக்குழுவின் பிரதிநிதிகள் கலந்துரையாடினர். அதனையடுத்தே போராட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

அரச மற்றும் படைத்தரப்பு பிரதிநிதிகளுடன் விரைவில் தொடர்பு கொண்டு இது விடயம் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரச அதிபரும் தெரிவித்தையடுத்து இப்போராட்டம் கைவிடப்பட்டது.

கலந்துரையாடலின் பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, எம்.கே.சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருடன் தென்மராட்சிப் பிரதேச செயலர், கிராம அலுவலர், செயற்பாட்டுக் குழு பிரதிநிதிகள் ஆகியோர் மீசாலை வடக்கு, மந்துவில் பகுதிகளுக்கு நேரில்சென்று பார்வையிட்டனர்.

ஒருமாத காலத்துக்குள் தமது கோரிக்கைக்குத் தகுந்த பதில் கிடைக்காவிட்டால் மீண்டும் மறியற் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக செயற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. (ஐ-10)

## மாளிகாவத்தைச் சம்பவங்கள்

# அமைதி காக்கக் கோருகின்றார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த

கொழும்பு,நவ.3

மதக் குழுக்களும் இனக் குழுக்களும் வீணாக மோதிக்கொள்ளும் இன்றைய நிலையில் இப்படியான பிரச்சினைகளை அவதானமாகவும், பொறுமையுடனும் கையாளவேண்டும். இதைத் தடுக்காவிட்டால் நாடு அதல பாதாளம் நோக்கிச் செல்வதை யாராலும் தடுக்கமுடியாது. எனவே, சகல இன மக்களும் தற்போதைய நிலையை கவனத்தில் கொண்டு செயற்படவேண்டும்.

- இவ்வாறு நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் மதத்தலைவர்களுடன் நடந்த கலந்துரையாடலில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ் கூறினார்.

மாளிகாவத்தையில் இடம்பெற்ற பதற்ற நிலைமையை அடுத்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1988-89 ஆம் ஆண்டுகளில் நாட்டின் பல பகுதிகளிலும் பொதுச் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. மனித உயிர்கள் பலி எடுக்கப்பட்டன. மீண்டும் ஒரு வன்செயலை தாங்கும் நிலையில் இந்த நாடு இல்லை. எனவே, இந்த மாதிரியான ஒரு நிலையில் அனைத்து மக்களும் பொறுமை காக்கவேண்டும்.

சகல மதங்களும் தர்மத்தையும், சமாதானத்தையுமே போதித்துள்ளன. சக மனிதனைப் போற்றவேண்டும்; மதிக்கவேண்டும் என்ற தார்மீகத்தை உணர்த்தியுள்ளன. இதைச் சகலரும் உணர்ந்து செயற்படவேண்டும்.

சகல மதத் தலைவர்களும் தமது மக்களுக்கு சமாதானத்தை வலியுறுத்த வேண்டும். மாளிகாவத்தை வன்செயலில் பலியான இளைஞனின் குடும்பத்துக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் எனது அனுதாபத்தையும் கவலையையும் தெரிவிக்கின்றேன் - என்றார் அவர். (எ)

# தெற்கிலிருந்து நீதிபதிகள் யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், நவ.3


இலங்கை நீதிச் சேவையாளர் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் நீதிபதிகள் மற்றும் மாவட்ட நீதிபதிகளை உள்ளடக்கிய குழு ஒன்று தெற்கிலிருந்து நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இன்று காலை இக்குழுவினர் நயினாதீவு செல்கின்றனர். மாலையில் யாழ். மேல்நீதிமன்ற நீதிவான் கே.பி.எஸ்.வரதராஜா, யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, மேலதிக நீதிவான் திருமதி.ச.இளங்கோவன், பருத்தித்துறை நீதிவான் அ.பிரேம்சங்கர் ஆகியோர் இணைந்து இன்று மாலை தேநீர்விருந்து ஒன்றை அளிக்கவிருக்கின்றனர்.

இக்குழுவினர் நாளை யாழ்.நீதிமன்ற நீதிபதிகளையும் சட்டத்தரணிகளையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய மாவட்ட நீதிபதி குலதிலக, மத்துகம மாவட்ட நீதிபதி சுனில் பெரேரா, கம்பஹா மாவட்ட நீதிபதி அமலதிலகரத்ன, நாவலப்பிட்டி நீதிவான் நம்புவாசம், பண்டாரவளை நீதிவான் வி.ஏ.ஆர்.சோமசிறி ஆகியோர் இந்தக்குழுவில் இடம்பெறுகின்றனர். (ம-3)

## முதல்வரின் இல்லத்துக்கு கிரனேட் வீச்சு!



ஸ்ரீநகர்,நவ.3


இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் புதிய முதல்வர் முப்தி முஹம்மட் சயீட்டின் இல்லத்தின் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இல்லத்துக்கு சில அடிகள் முன்பாக கிரேனட் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. நேற்றுக் காலை சுமார் 10.00 மணியளவில் இச்சம்பவம் நடந்தபோது முதல்வர் சயீட் அந்த இல்லத்தில் தங்கியிருந்தார்.

### உலக அரங்கில்

காஷ்மீரின் புதிய முதலமைச்சராக அவர் பதவியேற்பதற்கு சில மணி நேரம் முன்பாக இத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீநகருக்கு அருகே மௌளகாம் என்னும் இடத்தில் உள்ள முதமைச்சரின் இல்லத்தில் நடந்த இத்தாக்குதலில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.



அபிஜான் நகரத் தெரு ஒன்றில் விளையாடும் குழந்தைகள் இவர்கள். ஐவரிகோஸ்ட் நாட்டில் இடம்பெறும் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அந்தப் பிராந்தியத்தை அச்சுறுத்தும் சண்டையை முடிவுக்குக் கொண்டு வருமாறு மேற்கு ஆபிரிக்கத் தலைவர்கள் கொடுத்த அழுத்தத்தை அடுத்து ஆயுதக்குழுக்களும் அரசும் ஓர் உடன்பாட்டுக்கான பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கின்றனர். (ஐ)

## நதிகள் இணைப்புத் திட்டத்துக்காக

# விரைவில் ஜெயலலிதாவை சந்தித்துப் பேசுவாராம் ரஜனி!



சென்னை,நவ.3

நதிகள் இணைப்புத் திட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டி விரைவில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை நடிகர் ரஜனிகாந்த சந்திக்க இருப்பதாக தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது:-

காவிரி தண்ணீர் கேட்டு சென்னையில் நான் இருந்த உண்ணாவிரதப் போராட்டம் பிரமாண்ட வெற்றியை அளித்தது. நதிகள் இணைப்புக்காக நான் ஒரு கோடி ரூபா வழங்குவதாக அறிவித்தற்கும் நல்ல ஆதரவு கிடைத்துள்ளது. எனவே, காவிரி பிரச்சினை குறித்து மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த நான் விரும்புகிறேன்.

காவிரி பிரச்சினையை தீர்க்க, மக்கள் இயக்கம் என்ற ஓர் இயக்கத்தை தொடங்க முடிவு செய்து இருக்கிறேன். இதன் மூலம் தென்னக நதிகளை இணைப்பதன் அவசியத்தை பரப்ப நினைக்கிறேன்.

புதிய இயக்கத்தை தொடங்குவதன் மூலம் காவிரி பிரச்சினையை வைத்து நான் விளம்பரம் தேடிக் கொள்ளவோ அல்லது அரசியல் ஆதாயம் தேடவோ நினைக்கவில்லை. இதை நான் தெளிவாக தெரிவித்துக் கொள்கின்றேன். ஓர் அரசியல் தலைவராகவோ அல்லது சிறந்த ராஜதந்திரியாகவோ என்னை காட்டிக்கொள்ள நான் விரும்பவில்லை. அவ்வாறு ஆக வேண்டும் என்பதற்காகவும் நான் இதைச் செய்ய முன்வரவில்லை.

நதிகள் இணைப்புத் திட்டத்துக்கு என்னால் ஒரு தொடக்கத்தை ஏற்படுத்த இயலும். மக்களிடம் இது பற்றி ஒரு விழிப்புணர்வை என்னால் கொண்டு வர முடியும். ஆனால், ஆண்டவன் துணை அவசியம் தேவை.

இத்திட்டத்துக்காக தமிழக முதல்வர் ஜெயலலிதாவையும் சந்தித்து பேசுவேன். அவருடன் எனக்கு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், நதிகள் இணைப்புத் திட்டத்துக்காக அவரை நேருக்கு நேர் சந்திப்பதில் எனக்கு எந்தவித தயக்கமும் இல்லை. அவருக்கு தற்போது பல பிரச்சினைகள் உள்ளன. எனினும் இந்தத் திட்டத்தின் அவசியம் கருதி பொது நலன் கருதி நதிகள் இணைப்புத் திட்டத்துக்கு அவர் சம்மதிக்கவேண்டும் - என்றார் ரஜனி. (ஐ)



ஜம்மு காஷ்மீரில் புதிய முதல்வராக பதவியேற்றுள்ள முப்தி முஹமட் சயீட்டின் ஸ்ரீநகர் இல்லத்துக்கு வெளியே காவல் கடமையில் ஈடுபட்டிருக்கும் இந்தியப் படையினரை படத்தில் காண்கிறீர்கள். மோதல்கள் நடைபெறும் காஷ்மீரில் தீவிரவாதிகளின் புதிய இலக்காக மாறியிருக்கிறார் முதல்வர்.

## இத்தாலியில் பலமான பூகம்பம்

# பள்ளிக் கட்டடம் தகர்ந்தது! 28 சிறுவர்கள் சிக்குண்டு பலி!

ரோம்,நவ.3

இத்தாலி நாட்டில் கடந்த வியாழன்று இடம்பெற்ற பலமான நில அதிர்வில் பாடசாலைக் கட்டடம் ஒன்று தகர்ந்ததில் அதனுள் சிக்குண்டு 28 சிறுவர்கள் உட்பட 30 பேர் மாண்டனர்.

இத்தாலியின் மத்திய தெற்கு பகுதியில் சென்.கிலிலியானோ புகுலியா என்ற கிராமமே நில அதிர்வினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. மலை உச்சியில் உள்ள இந்தக் கிராமத்தில் இருந்த - சுமார் 50 வருடங்கள் பழைமை வாய்ந்த சிறுவர் பாடசாலைக் கட்டடமே நில அதிர்வினால் இடிந்து வீழ்ந்தது. 56 சிறுவர்கள் இடிபாடுகளில் சிக்குண்டனர்.

இடிபாடுகள் மீட்கப்பட்ட போது அவர்களில் 28 சிறுவர்கள் உயிரிழந்திருப்பது தெரிய வந்தது. சிறுவர்களின் மரணம் அந்த கிராமத்து மக்களிடையே ஆழ்ந்த துயரத்தையும் சீற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

அருகே இருந்த கட்டடங்கள் பலவும் உறுதியாக தாக்குபிடித்து நிற்க பாடசாலைக் கட்டடம் மட்டும் இடிந்து வீழ்ந்திருப்பதே பொதுமக்களின் கோபத்துக்கு காரணமாகும்.

ரிக்டர் அளவில் 5.3 எனப் பதிவாகிய இந்த நில அதிர்வினால் மேலும் பரவலான சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. (ஐ)



இத்தாலியின் மத்திய மேற்கு மாகாணத்தில் பூகம்பத்தால் தாக்குண்ட கிராமத்தின் இடிபாடுகளை படத்தில் காணலாம். அருகில் உள்ள வீடுகள் பல தப்பிப் பிழைத்து நிற்க சிறுவர் பாடசாலை கட்டடம் மட்டும் தரைமட்டமாகிக் கிடக்கின்றது.

### மொராக்கோ சிறையில் தீ! 49 பேர் சாவு

ராபட்,நவ.3

மொராக்கோ நாட்டில் சிறையில் நிகழ்ந்த தீ விபத்தில் 49 கைதிகள் உயிரிழந்தனர்; 89 பேர் காயம் அடைந்துள்ளனர். வெள்ளிக்கிழமை இச்சம்பவம் நடந்தது. அட்லாண்டின் கடலோரம் உள்ள எல் ஜாடிடா என்ற ஊரில் இச்சம்பவம் நடந்தது. சிறையில் கைதிகள் எண்ணிக்கை அதிகம் இருந்ததால் நிரம்பி வழிந்தது. தீ எரிந்த போது வெளிப்பட்ட புகையில் மூச்சுத்திணறியே பெரும்பாலானவர்கள் இறந்தனர் என்றுகூறப்படுகிறது.

## 216 இந்திய மீனவர்களை விடுவிக்க பாகிஸ்தான் முடிவு

அரபிக் கடல் பகுதியில் தங்கள் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததாகப் பிடிபட்ட 216 இந்திய மீனவர்களை விடுவிக்க பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

இன்னும் ஒருவாரத்தில் இவர்கள விடுக்கப்படுவார்கள் என்று பாகிஸ்தான் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் செய்தித் தொடர்பாளர் ஹாஜி முஹம்மது தெரிவித்தார். கராச்சியில் உள்ள துறைமுகத்தை இச் சங்கம் நிர்வகித்து வருகிறது.

ஏற்கனவே இந்த ஆண்டின் முற்பகுதியில் சில மீனவர்கள் விடுக்கப்பட்டு இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மீதமுள்ள 216 பேரும் சில தினங்களில் விடுவிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் மீனவர்கள் 23 பேரை இந்தியா பிடித்து வைத்திருப்பதாகவும் அவர்களை விடுவிப்பது குறித்து இதுவரை எந்தத் தகவலும் இல்லை என்றும் முஹம்மது கூறினார்.

# வெடி குண்டு ஆடைகள் தயாரிக்கிறது அல்கெய்டா!

அல்கெய்டா தீவிரவாத அமைப்பு வெடிகுண்டு ஆடைகளைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானங்களை வெடிவைத்துத் தகர்க்கத் திட்டமிட்டால், விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகளிடமிருந்து எளிதில் விமான நிலையத்துக்குள் செல்லவும், அதிக அளவில் சேதத்தை உண்டாக்கும் விதத்திலும் இந்த வகை சட்டை அமையும் என்று அந்த அமைப்பின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்ததாக லண்டனில் வெளியாகும் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

இந்தியப் பெருங்கடலின் பிரிட்டன் தீவு ஒன்றில் அமெரிக்கப் புலனாய்வு அமைப்பினரால் கைது செய்யப்பட்டுள்ள அல்கெய்டா உறுப்பினர் இதைத தெரிவித்தார். சாதாரண முறையில் வடிவமைக்கப்படும் இந்த ஆடை மழை குளிர் காலத்துக்கான 'கோட்' போல் அடர்த் தியாக இருக்கும். இதில் பிளாஸ்டிக் வெடிபொருள்கள் அடைக்கப்பட்டிருக்கும்.

மனித வெடிகுண்டாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர், இந்தச் சட்டையை அணிந்து கொண்டு செல்லும்போது சில்லறை நாணயங்களை தங்களது சட்டைப் பையில் வைத்துக் கொண்டு செல்வர் - என்றார்.

சில்லறை நாணயங்களை சட்டைப் பையில் வைத்துக் கொண்டு செல்லும் திட்டத்தைப் பற்றி பிரிட்டன் இராணுவப் பத்திரிகையின் ஆசிரியர் கிறிஸ் யாட்ஸ் குறிப்பிடுகையில் "விமான நிலையங்களில் பாதுகாப்பு அதிகாரிகள் மெட்டல் டிடெக்டர் மூலம் சோதிக்கும் போது சில்லறை நாணயங்கள் உள்ளதைப் பார்த்துவிட்டு அவரை உள்ளே அனுப்பி விடுவர். பொதுவாக சில்லறையை எடுக்கச் சொல்லி மீண்டும் சோதிப்பதில்லை. எனவே அவர்கள் திட்டம் வெற்றி பெற வாய்ப்பு உள்ளது"- என்றார். (ம)

## அமெரிக்க நிறுவனத்திடம் நஷ்டஈடு கோருகிறார் இந்தி இசையமைப்பாளர்

லொஸ்ஏஞ்சல்ஸ்,நவ.3

இந்திய இந்தி இசையமைப்பாளர் ஒருவர் தனது இசையை அனுமதியின்றிப் பயன்படுத்திய அமெரிக்க நிறுவனத்திடம் 2ஆயிரத்து 250 கோடி ரூபா நஷ்டஈடு கேட்டு வழக்குத் தொடர்ந்துள்ளார். இந்தி இசையமைப்பாளரான பப்பிலஹிரி கடந்த 20 ஆண்டுகளுக்கு முன் ஒரு பாடலை எழுதி இசையமைத்தார். பிரபல இந்திப் பின்னணிப் பாடகி லதா மங்கேஷ்கர் அந்தப் பாடலைப் பாடியுள்ளார்.

மிகவும் பிரபலமான அந்தப் பாடலை மும்பாயைச் சேர்ந்த 'சரிகம' என்ற இசை நிறுவனம் பதிவு செய்து அல்பமாக வெளியிட்டது.

இந்த இசையை அமெரிக்காவில் உள்ள டாக்டர் டிரே என்பவருக்கு சொந்தமான படத்தயாரிப்பு நிறுவனம் ஒன்று அனுமதியின்றி பயன்படுத்தி 'அடிக்ட் டிவ்' என்ற பெயரில் அல்பமாக வெளியிட்டு 6 லட்சம் பிரதிகளை விற்பனை செய்து பணம் சம்பாதித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி இந்திய இசையமைப்பாளர் பப்பிலஹிரிக்கும் அவரது பாடலைப் பதிவுசெய்த 'சரிகம' மியூசிக் நிறுவனத்துக்கும் தெரியவந்தது. இதைத் தொடர்ந்து இசையமைப்பாளர் பப்பிலஹிரி லொஸ் ஏஞ்சல்சில் உள்ள நீதிமன்றத்தில் தனது இந்திப் பாடலை பிரதி செய்து அல்பமாக வெளியிட்டுப் பணம் சம்பாதித்த டாக்டர் டிரேயின் நிறுவனத்துக்கு எதிராக நஷ்டஈடு கேட்டு வழக்குத் தொடர்ந்துள்ளார்.

# 92 வயது முதியவருக்கு கௌரவம்

தென்மராட்சி,நவ.3

பளைப் பிரதேச செயலகத்தினால் கடந்த சனியன்று நடத்தப்பட்ட முதியோர்தின விழாவில் 92 வயதான தம்பகாமத்தைச் சேர்ந்த தங்கராசா என்பவருக்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் த.இராசநாயகம் மாலை அணிவித்து பணப்பரிசும் பார்சலும் வழங்கிக் கௌரவித்தார்.

வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலையில் பிரதேச செயலர் சு.புத்திசிகாமணி தலைமையில் நடைபெற்ற விழாவில் பிரதேசத்தைச் சேர்ந்த 30 முதியோர்கள் மலர்மாலைகள் அணிவித்து பலரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

சர்வதேச முதியோர் வாரத்தையொட்டி பிரதேச பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ம-117)

## இறைவன் அழைப்பின் 4ஆம் வருட ஞாபக அஞ்சலி

மலர்வு: 05 - 06 - 1918



உதிர்வு: 03 - 11 - 1998

### திருமதி சபீனா டானியல்

இறைவா!

எனக்கு அன்னையாய் அளித்த உமது தயவிற்காக!
"உமது நாமம் என்றும் போற்றப்படுவதாக"

(10173)

அமல உற்பவம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

அன்பு மகன்
அருட்திரு. பிரான்சிஸ் டானியல் அ.ம.தி.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசையா பொன்னம்மா

யாழ்ப்பாணம், 109, இராசாவின் தோட்டம் வீதியைச் சேர்ந்த திருமதி இராசையா - பொன்னம்மா 01.11.2002 சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற S.R.கதிரவேற்பிள்ளை (பெரிய கடுக்கன்) மற்றும் பஞ்சாட்சரம் (லொறி உரிமையாளர் - சின்னக்கடுக்கன்), பாலசுந்தரம் (கொழும்பு), தங்கமணி (பிரான்ஸ்), சிவகங்கை ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி இராசமலர் கதிரவேற்பிள்ளை (கனடா), திருமதி கேதாரகௌரி பஞ்சாட்சரம், திருமதி தனேஸ்வரி பாலசுந்தரம் (கொழும்பு), காலஞ்சென்ற நபமுனிச்சாமி (ஆசிரியர்) மற்றும் அ.முத்துலிங்கம் (உதயன் பத்திரிகை நிறுவனம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ரவீந்திரன் (நெதர்லாந்து), விஜேந்திரன் (பிரான்ஸ்), குலேந்திரன் (கனடா), சித்திரா (கனடா), அநுவஷியா (கனடா), தனஜா (கனடா), இந்திரா (கனடா), நர்ஷிகா (கனடா), மல்லிகா (சுவிஸ்), பௌஷிகா (ஜேர்மனி), கேதீஸ்வரி, கௌசிகா (பிரான்ஸ்), பிரதீபா (கலாலயா, யாழ்ப்பாணம்), தவனியா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), பிரியதர்ஷினி (பப்புவா நியூகினி), ராஜ்குமார் (லண்டன்), ரோஹினி (கொழும்பு), தயாபரன் (பிரான்ஸ்), பத்மசுந்தரி (பிரான்ஸ்), பிரேமலதா (பிரான்ஸ்), தயானந்தன் (பிரான்ஸ்), அரவிந்தன் (பிரான்ஸ்), சுதர்சன் (பிரான்ஸ்), ரமணன் (லண்டன்), கஜனி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2002) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணிக்கு தகனஞ்செய்வதற்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.பஞ்சாட்சரம் (சின்னக்கடுக்கன் - மகன்),
இ.பாலசுந்தரம் (மகன்),
அ.முத்துலிங்கம் (மருமகன்)

109, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 3130 (ப/24881)

## திருமதி பரமேஸ்வரி கந்தசாமி

மாதகல், காஞ்சிபுரம் வீதியைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி 01.11.2002 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - லட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும் சண்முகப்பிரியா, பிரபாகரன் (லண்டன்), கல்யாணி ஆகியோரின் அன்புத் தாயாரும் புவனக்கிளி, சிவபாலசுப்பிரமணியம் (பொதுமுகாமையாளர், யாழ். மா.கிரா.வங்.சமாசம்), சிங்கராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகராஜா, சௌந்தராணி, தட்சாயிணி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு மாதகல் காஞ்சிபுரம் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 'மாதகல்' போதி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காஞ்சிபுரம் வீதி,
மாதகல். (10233)

தகவல்: லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் (சகோதரன்)

## மூத்ததம்பி குருசாமி

சுழிபுரம் வடக்கைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மூத்ததம்பி குருசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று 2.11.2002 சனிக்கிழமை அதிகாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3.11.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு, அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S.ஜெகநாதன் (மருமகன்)
(லங்கா சிமெந்து லிமிட்டெட்).
R.இராசதுரை (மைத்துனர்)
(உரிமையாளர், ரட்ணம்ஸ் ஸ்ரோர்ஸ், சுழிபுரம்).

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். (10236)


21ஆம் நூற்றாண்டின் புதிய களைநாசினி

'ரச்டவுன்'

தோட்டங்களிலும், தரிசு நிலங்களிலும் கோரை, அறுகு, பாதீனியம் களைகளை ஒரே தடவையில் முற்றாக அழிக்கப் பாவியுங்கள்!

CICஇன் அதி விசேட தயாரிப்பான

'ரச்டவுன்' (களை நாசினியை)

*மற்ற எந்த களைநாசினியிலும் இல்லாத இதன் சிறப்புத்தன்மை.*

- இதில் கிளைபோசேற்றுடன் றைமேசியம் என்ற இரசாயனம் கலந்து இருப்பதனால், களைகளின் வேர்களை, கிழங்குகளை சிறந்தமுறையில் ஊடுருவித் தாக்கி முற்றாக அழிக்கின்றது.
- களைநாசினி தெளித்து 10 - 12 நாள்களுக்குள் களைகளை முற்றாகக் கட்டுப்படுத்தும் தன்மை.
- மழையினால் பாதிப்படையாது.
- பயிர் செய்யும் மண்ணுக்கு ஒருவித பாதிப்பும் இல்லை. [200 மி.லீ. (8அவு.) ரச்டவுன் களைநாசினியை 16 லீற்றர் (31/2) கலன் நீரில் கலக்கவும்]

*எல்லா விவசாய மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்*

ஏக விநியோகஸ்தர்:

பவானி களஞ்சியம்
*இராச வீதி, நீர்வேலி.*

CIC கெமிக்கல் இன்டஸ்றீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
*199, கியூ வீதி, கொழும்பு - 02*

(10007)

கிருமி நாசினிகள் அபாயகரமானவை. அவதானமாகப் பாவிக்கவும்.



PALM BEACH RESTAURANT

முற்றாகக் குளிரூட்டப்பட்ட புதுப்பொலிவுடன் திகழும் புதுமைமிக்க உணவகம்

ஒருமுறை விஜயஞ் செய்யுங்கள்! உண்மை உடனே விளங்கும்!




உங்கள் திருப்தியே எங்கள் நிறைவு! இன்றே வாருங்கள்! வந்து பாருங்கள்!

வாரநாள்களில் உணவு வழங்கும் முறைகள்:


Special Items பிரத்தியேக முறைகள்

| | | |
|---|---|---|
| திங்கட்கிழமை | மதிய உணவு: | சிக்கன் பிரியாணி |
| | இரவு உணவு: | சப்பாத்தி, பூரி, இன்னும் பல. |
| செவ்வாய்க்கிழமை | மதிய உணவு: | ஐந்து(5) மரக்கறிகளுடன் சைவஉணவு. (இந்திய முறைப்படி தயாரிக்கப்பட்டது) |
| | இரவு உணவு: | மசாலைத் தோசை, நெய்த்தோசை உங்கள் விருப்பப்படி இன்னும் பல. |
| புதன்கிழமை | மதிய உணவு: | ஆட்டிறைச்சிப் பிரியாணி, கோழிப்பிரியாணி |
| | இரவு உணவு: | ரொட்டி, கொத்துரொட்டி, இட்லி உங்கள் விருப்பப்படி இன்னும் பல. |
| வியாழக்கிழமை | மதிய உணவு: | ஆட்டுக்குடல்கறி அத்துடன் மீன்கறியும் |
| | இரவு உணவு: | மாலை 5 மணிமுதல் இரவு 10 மணிவரை சூடான அப்பம், பால் அப்பம், முட்டை அப்பம், சாதாரண அப்பம் ஆகியவை கிடைக்கும். |
| வெள்ளிக்கிழமை | மதிய உணவு: | ஐந்து (05) மரக்கறிகளுடன் சைவஉணவு அத்துடன் மச்சமும் விருப்பப்படி தெரிவுசெய்யலாம். |
| | இரவு உணவு: | இட்லி, தோசை, பூரி, சப்பாத்தி, மசாலைத் தோசை சுலபமாகக் கிடைக்கும். |
| சனிக்கிழமை | மதிய உணவு: | நண்டுக்கறி, இறால், கணவாய் என்பன வழங்கப்படும். |
| | இரவு உணவு: | உங்கள் விருப்பப்படி யாவும் கிடைக்கும். |
| ஞாயிற்றுக்கிழமை | மதிய உணவு: | இன்னும் பல தின்பண்டங்கள், உணவு வகைகள் புதிதாகவும் வழமைபோலும் தயாரித்து வழங்கப்படும். (தண்டூரிச் சிக்கின் - Tandoori Chicken) |

☞ எல்லா நாள்களிலும் சுவைமிக்க உணவுவகைகளை விருப்பம்போல் உண்டு களித்திடலாம்.

குளிரூட்டப்பட்ட தங்கும் அறைகள் குளிரூட்டப்படாத தங்கும் அறைகள் சகல வசதிகளுடனும் கிடைக்கும்

077 733316
077 153889



நிர்வாகம்
*10/11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

யாழ்ப்பாணத்தில் தனித்துவமான சுவை உணவகம்

Palm Beach Restaurant PBR

(சி-24671)

உதயன்

## கல்வித் திணிப்பு

சமூக மாற்றத்தின் காரணமாக - பிள்ளைகளின் எதிர்பார்ப்புக் காரணமாக - அவர்கள் மீதான திணிப்பு அதிகரிக்கின்றது. இதனால் பிள்ளைகள் தடுமாறுவதைக் காணமுடிகிறது. பிள்ளையின் கல்வி எவ்வளவு முக்கிய மானதோ அந்தளவுக்கு அவர்களின் ஆளுமை விருத்தியும் அவசியமாகின்றது.

மூத்த கல்விமானும் பேராசிரியருமான கா.சிவத்தம்பி பாடசாலை நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோது மேற் கண்ட கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

எத்தகைய கல்வி, எத்தகைய கல்வி புகட்டல் தமது பிள்ளைகளின் திறமைகளை வெளிக்கொணரும் என்பதில் பெற்றோர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்றும் அவர் ஆலோசனை தெரிவித்திருக்கிறார்.

அவரது இந்தக் கருத்து - ஆலோசனை - குடாநாட்டு பெற்றோர்களுக்கு இப்போது மிகப்பொருத்தமானது - அவசியமானது - அவர்கள் மிகக் கவனம் கொள்ளவேண்டியது.

நீண்ட போரின் தாக்கத்துக்கு உட்பட்டு வந்த குடாநாட்டில் தொழில் வளங்கள், வாய்ப்புகள் நவீன உலகோடு ஒத்து ஓடுகின்ற தொழில்நுட்ப வசதிகள் இழக்கப்பட்டுவிட்டன. இந்தப் பின்னணியிலும் நாம் கல்வியில் சளைத்தவர்கள் அல்லர் என்பதை எமது மாணவர் தலைமுறைகள் நிரூபித்து வந்திருக்கின்றன. மாணவரின் அண்மைக்கால அடைவுகள் வீழ்ச்சியைக் காட்டுவதாகக் கருதப்படுகின்ற நிலையிலும் தமிழ்ச் சமூகம் கல்வியையே தனது பற்றுக்கோலாகக் கொண்டு நிற்கின்றது. பொருளாதார இழப்புகளின் மத்தியிலும் தமிழ்ச் சமூகத்தின் ஒரே பலமாக நிற்கும் தூண் கல்விதான்.

தமிழ்மக்களின் அழியாச் சொத்தாக நிலைத்துவரும் கல்வியை தமிழ்ச் சமூகம் மதித்துப் பேணுகிறது. ஆனால் தொழில் வாய்ப்புகள் அருகிவிட்டநிலைமை, உயர்கல்வி வாய்ப்புகள் கிட்டாத சூழ்நிலை என்பன கல்வித்துறையில் போட்டிகளை வளர்த்து வருகின்றன. இந்த நிலைமையில் தங்கள் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய ஏக்கம், பயம் பெற்றோர்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றது.

குடாநாட்டைப் பொறுத்தவரை பல்கலைக்கழகக் கல்வியே கல்வியின் ஒரே இலக்கு என்ற நிலை காணப்படுகிறது. பெற்றோர்களின் சராசரி எதிர்பார்ப்பு இதுதான். ஏராளமான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பல்கலைக்கழகம் நோக்கி - அதையே கல்வியின் இலக்காகக் காட்டி - கரட்டைக் காட்டி குதிரையை விரட்டுவதுபோல - விரட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இன்று பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களின் எதிர்காலம் எப்படி இருக்கிறது?

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரே பல்கலைக்கழகத்திலிருந்து ஆண்டுதோறும் சுமார் ஆயிரம் மாணவர்கள் பல்வேறு தொழில் தகைமைகளுக்கான பட்டங்களுடன் வெளியேறுகின்றனர். அதன்பின் அவர்கள் வீதிகளில் அலையும் நிலையே காணப்படுகிறது. அல்லது தங்கள் கல்வித் தகைமைக்கு சம்பந்தமில்லாத தொழில்களில் அவர்கள் ஈடுபடவேண்டி உள்ளது.

பல்கலைக்கழக அனுமதி பெறுவது எந்தளவுக்குக் கடினமானதோ அதேபோன்று குறிப்பிட்ட சில பாலர் பாடசாலைகளுக்கான அனுமதி பெறுவது என்பதும் கல்லில் நார் உரிப்பது போன்று மிகக் கடினமாக - இயன்றாலும் முடியாத - காரியமாக மாறியிருக்கிறது.

இது பிஞ்சுக் குழந்தைகள் மீதான திணிப்புகளுக்குக் காரணமாகின்றது. இந்தத் திணிப்பு ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு சிறுவர்களைத் தயார்ப்படுத்தும் வழிமுறைகளில் எல்லை மீறுகின்றது - சிறு பிஞ்சுகளின் அகவுலகில் ஆழமான காயங்களை உருவாக்கிவிடும் அளவுக்கு.

தங்கள் குழந்தையும், குடும்பமும் கல்விமூலம்தான் உயர்வடையமுடியும் - என்று பெற்றோர்கள் எண்ணுவதில் தப்பில்லை. ஆனால், எத்தகைய கல்வி முறை தங்கள் குழந்தையை ஆளுமை விருத்தியுள்ள மனிதனாக்கும் என்று எண்ணிப் பார்க்குமளவுக்கு பெற்றோர்கள் 'பக்குவப்பட்டவர்களாக' இல்லாதிருக்கின்றனர்.

சமூக நிலைமைகள் அவர்களை அப்படியாக்கியிருக்கலாம். ஆனால், இளம் பிஞ்சுகளான எமது குழந்தைகள் வெறும் இயந்திரங்கள்போல மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது சோகமான உண்மை.

கல்வி இன்றேல் - உச்சப் பெறுபேறு கிட்டாவிடில் - தொழில் இல்லை, ஏன் வாழ்க்கையே இல்லை என்று எண்ணும் பெற்றோர்களின் எதிர்பார்ப்பு இயலாமையாக மாறும்போது பிள்ளைகள் மீதான திணிப்பாக உருவெடுக்கிறது. உயர்தர மாணவர்கள் விடயத்தில் இந்தத் திணிப்பை ஓரளவு அவசியமானது என்று சகித்துக் கொண்டாலும் குழந்தைகளைப் பொறுத்தவரை இது ஆபத்தானது; நேர்மாறான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது.

குழந்தைகளைக் குழந்தைகளாக வளரவிடவும் அவர்களோடு அவர்களின் ஆளுமை விருத்திபெறவும் மேற்கண்ட கல்வித் திணிப்பு உதவாது என்பதை பெற்றோர்கள் உணரட்டும்.

# 'எய்ட்ஸ்' நோயின் தாக்கம் குடாநாட்டை நெருங்குகிறது!

## எச்சரிக்கின்றார் கியூடெக் இயக்குநர்

யாழ்ப்பாணம்,நவ.3

'எய்ட்ஸ்' நோயின் ஆபத்து குடாநாட்டு மக்களை நெருங்கிக்கொண்டிருக்கின்றது. எனவே, அதனை உணர்ந்து அனைவரும் விழிப்புடன் இருக்கவேண்டியது மிகவும் அவசியம்.

இவ்வாறு எச்சரித்திருக்கிறார் 'கியூடெக்' நிறுவன இயக்குநர் அருட்திரு. சி.ஜி.ஜெயக்குமார் அடிகளார்.

'யுனிசெவ்' நிறுவனத்தின் ஆதரவுடன் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் குடாநாடு தழுவிய ரீதியில் செயற்படுத்தவுள்ள 'எய்ட்ஸ்' நோய் விழிப்புணர்வுத் திட்டத்தின் ஆரம்ப வைபவம் நேற்று அகதிகள் புனர்வாழ்வு நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ஆசியுரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று உலகளாவிய ரீதியில் சுமார் 40 கோடி மக்கள் 'எய்ட்ஸ்' நோயின் தாக்கத்துக்கு உள்ளாகியிருக்கின்றனர். அதேவேளை, 3கோடி மக்கள் இதுவரை இந்நோயினால் மரணத்தைத் தழுவிக்கொண்டுள்ளனர்.

- இவ்வாறு இந்தக் கொடிய நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் 90 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

எனவே, இவ்வாறான எய்ட்ஸ் விழிப்புணர்வுத் திட்டங்களை எமது பகுதிகளில் மேற்கொள்ளவேண்டியது காலத்தின் தேவையாகும்.

இந்தக் காலத்தின் தேவையை உணர்ந்து கொண்டு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் முன்னெடுக்கின்ற இந்த முன்மாதிரியான திட்டம் வரவேற்கத்தக்கதாகும்.

இலங்கையைச் சேர்ந்த சுமார் பல லட்சம் பேர் வெளிநாடுகளில் பணிபுரிகின்றனர். இவ்வாறான காரணங்களால் குடாநாட்டு மக்களுக்கு வரக்கூடிய ஆபத்து வெகுதொலைவில் இல்லை.

எனவே, 'எய்ட்ஸ்' நோயைக் கட்டுப்படுத்தவும், அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அனைத்துத் தரப்பினரும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வுக்குத் தலைமைவகித்த ஜி.சேரன் தனது உரையில்:-

எம்மால் முன்னெடுக்கப்படவிருக்கும் இந்த விழிப்புணர்வு நடவடிக்கையானது குடாநாட்டில் அவசரமாக முன்னெடுக்கப்படவேண்டிய திட்டம் என்றும் -

அந்தப் பணிக்கு அனைவரது ஒத்துழைப்பும் தேவை என்றும் - குறிப்பிட்டார்.

வரவேற்புரையை ஆர்.சுகிர்தாவும் விளக்கவுரையை ஏ.ஜே. றொனால்டும் நிகழ்த்தினர்.

அத்துடன், நிகழ்வில் கலந்துகொண்ட சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் அ.சிவதட்சணாமூர்த்தி, தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியப் பிரதிநிதி ஆகியோர் இந்த விழிப்புணர்வுத் திட்டத்தை முன்னெடுப்பதற்குரிய வழிமுறைகள் குறித்து ஆலோசனை வழங்கினர். (எ-4)

## திறந்த பல்கலைக்கழக

# பிராந்திய நிலைய பட்டமளிப்பு; தொடர்ந்தும் கொழும்பிலா?

## யாழ்.மாணவர் தரப்பில் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.3

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்துக்கான பட்டமளிப்பு விழாவைத் தொடர்ந்தும் கொழும்பில் நடத்துவது குறித்து மாணவர்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திறந்த பல்கலைக்கழகம் நடத்திய யாழ்.பிராந்திய நிலையத்துக்கான முகாமைத்துவமாணி பட்டமளிப்பு விழா எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு றோயல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தப் பட்டமளிப்பு விழா குறித்தே மாணவர்கள் தமது விசனத்தைத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் நான்கு பிராந்திய நிலையங்கள் உள்ளபோதும், யாழ்.பிராந்திய நிலையத்தின் பட்டமளிப்பு விழா மட்டுமே இவ்வாறு இம்முறையும் கொழும்பில் நடத்தப்படவுள்ளது. ஏனைய நிலையங்களான கொழும்பு, கண்டி மற்றும் மாத்தறை ஆகியவற்றில் கற்கும் மாணவர்களுக்குரிய பட்டமளிப்பு அந்தந்தப்பிராந்திய நிலையங்களிலேயே நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் நிலவிய அசாதாரண சூழ்நிலையைக் காரணங்காட்டி யாழ்.பிராந்திய நிலையத்துக்கான பட்டமளிப்பு கொழும்பில் நடத்தப்பட்டு வந்தது. எனினும் ஏ-9 தரைவழிப் பாதை திறக்கப்பட்ட பின்பும் இந்த நிலை தொடருவது தமக்குக் கவலை அளிப்பதாகவுள்ளது என மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பிராந்திய நிலையத்தில் பட்டமளிப்பு நடத்தினால் எதுவித சிரமங்களுமின்றி அதில் பங்குபற்ற முடியும் என்றும் -

இனிவரும் காலங்களிலாவது இது குறித்து உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - மாணவர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - மேற்படி பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளச் செல்லும் மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

(எ-10-5)

**நாளை**

ஐப்பசி 18
திங்கட்கிழமை
(04.11.2002)
திதி: அமாவாசை
பின் இரவு 3.09வரை.
நட்சத்திரம்: சித்திரை
காலை 7.51 வரை.
அமாவாசை விரதம்
தீபாவளித் திருநாள்
கேதாரகௌரி விரதம்
சுபநேரம் : 12.04 - 1.34
ராகுகாலம் : 7.34 - 9.04
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

உணர்ச்சிவசப்படாதவர்களும் பற்றற்றவர்களும் இந்த உலகிற்கு மிகுந்த நன்மையைச் செய்திருக்கிறார்கள்.

# பிச்சை கேட்டு வந்த முஸ்லிம் பெண்மீது வல்லுறவு

## திருமலை நகரில் வெள்ளியன்று சம்பவம்

திருகோணமலை,நவ.3

பிச்சை எடுப்பதற்கு வந்த முஸ்லிம் இளம் ஊமைப்பெண் ஒருவர் அதே இனத்தைச் சேர்ந்த இளைஞர் குழு ஒன்றினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்.. இந்தக் கொடுமையான சம்பவம் கடந்த வெள்ளியன்று திருகோணமலையில் இடம்பெற்றுள்ளது.

ஆண், பெண் மற்றும் சிறுவர் அடங்கிய முஸ்லிம்கள் குழு ஒன்று ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கிண்ணியாவில் இருந்து திருகோணமலை நகருக்கு வந்து பிச்சை எடுத்துச் செல்வது வழக்கம். இந்தக் குழுவில் கைக்குழந்தைகளுடன் வரும் இளம்பெண்களே அதிகம். இவ்வாறு இந்தக் குழுவில் வந்த ஓர் இளம் முஸ்லிம் ஊமைப் பெண்ணே முஸ்லிம் குண்டர்கள் சிலரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

வியாபார நிலையங்கள், வீடுகளில் பிச்சை எடுக்கும் இத்தகையோரை சிலர் ஏளனமாகவும், இழிவாகவும் பேசுவதோடு அவர்கள் மீது பாலியல் சேஷ்டைகளும் மேற்கொள்கின்றனர். குறிப்பாக இளம்பெண்களே இவ்வாறான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் - என்று திருமலை சமாதான நீதவான் ஆர்.சுசனார் தெரிவித்துள்ளார். (எ)


## என்னைப்பற்றியும் எண்ணுவீர்களா?



'நாளைய சந்ததிக்காய் இன்றே சிந்திப்போம்'
வெளியீட்டு அனுசரணை SC (UK)

'பெரியோரே! என் பேச்சிற்கும் கொஞ்சம் காது கொடுங்களேன்!!
"பூக்களின் மென்மைபோல் மிகமிக மிருதுவானது என்மனது. அன்பையும் அணைப்பையும் மட்டுமே வேண்டி நிற்கும் எனக்கு உங்கள் அதட்டல்கள் அழுகையை மட்டுமே பரிசாகத் தருகின்றன.

அப்பாவும், அம்மாவும் மற்றப் பெரியோரும் தம் தம் கோபங்களுக்கு என்னை ஏன் தண்டிக்கிறார்கள்?.... அப்படி அவர்கள் அடிக்கும்போதும் அதட்டும் போதும் கலைந்துபோயுள்ள என் கூந்தல் போலவே மனசும் குலைந்து போய்விடுகிறது!"

*- உங்கள் தண்டனைக்குள்ளாகும் ஒரு மழலையின் மனதிலிருந்து -*

தொடர்புகளுக்கான முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் - 30
யாழ்.போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம். தொ.பே: 0212222261 Ext.274

(சி24687)

## கட்டடத் திறப்பு விழா

புனரமைக்கப்பட்ட இளவாலை, மாரீசன் பதி புனித கயித்தார் சனசமூக நிலையக் கட்டடம் இன்று மாலை 3.30 மணிக்கு வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி பாலாம்பிகை பாஸ்கரனால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி, வலி. வடக்கு பிரதேச செயலர் திருமதி ப.திலகநாயகம், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண.பிதா ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம், வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி வி.கந்தையா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா, புனித கயித்தார் ஆலய பங்குத்தந்தை வண.பிதா பொணிபேஸ் எஸ்.வஸ்ரியாம்பிள்ளை, தமிழீழ விடுதலைப்புலிகளின் வலிகாம சிறப்புப் பொறுப்பாளர் வேந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.(எ-48)

## விளையாட்டு வினையானது

புத்தளம், நவ.3

நாட்டிலுள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளும் நேற்று முன்தினம் நோன்பு கால விடுமுறைக்காக மூடப்பட்டன. இறுதி பாடசாலை தினமான நேற்றுமுன்தினம் புத்தளம் கல்லூரி ஒன்றில் மாணவர்கள் நடத்திய ஒரு கேளிக்கை நிகழ்ச்சி இறுதியில் விபரீதத்தில் முடிந்தது.

கலர் நிரப்பப்பட்ட தண்ணீர் பைகளையும் கோழி முட்டைகளையும் மாணவர்கள் ஒருவர் மீது ஒருவர் எறிந்து விளையாடியபோது திடீரென இரு மாணவர் கோஷ்டியினர்களுக்கிடையே முறுகல் நிலை ஏற்பட்டு அது கைகலப்பில் முடிந்தது.

இதுபற்றி உடனடியாக முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸுக்கு அறிவிக்கப்பட்டது. அவர் உடனடியாக நடவடிக்கையில் இறங்கி இரு மாணவர் கோஷ்டிகளின் மோதலை முடிவுக்குக் கொண்டுவந்தார். (எ)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சகல ஆவணங்களுடன் கூடிய 200-ஐ தொடர் இலக்கமாகக் கொண்ட பச்சை நிற ஆட்டோ உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:T.P.: 0777- 733954 (10128)


★ மலிவு விற்பனை ★ மலிவு விற்பனை ★ மலிவு விற்பனை★ மலிவு விற்பனை★ மலிவு விற்பனை★

# மாபெரும் மலிவு விற்பனை!

## தீபாவளியை முன்னிட்டு!!

யாழ்.நகரில் ! ஆண்டாண்டு காலமாக புடைவை உலகின் முன்னோடி நிறுவனமாகத் திகழும்

நியூ ராசி சில்க்ஸ் நிறுவனத்தின்

இணை நிறுவனமான நியூ நல்லி சில்க்ஸ்

மீண்டும் யாழ்.நகரில்

அநேக வாடிக்கையாளர்கள், நண்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இயங்கத் தொடங்கியுள்ளது என்பதை எம் வாடிக்கையாளர்களுக்கு மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



கல்யாணப் பட்டுப் புடைவைகளின் கைராசி நிறுவனம்

- ★ திருமணப் புடைவைகள்
- ★ சேட்டிங்
- ★ ஸ்கேட் & பிளவுஸ்
- ★ சல்வார் கிற்
- ★ இந்தியன் உட்பட அனைத்துச் சாறி வகைகள்
- ★ சோளி கிட்
- ★ சேட் வகைகள்
- ★ கவுண்
- ★ பேபி சூட்
- ★ சாறிகளுக்கேற்ப பிளவ்ஸ் துணிகள்
- ★ சிறுவர்,சிறுமியருக்கு ஏற்ற றெடிமேட் ஆடைவகைகள்

மற்றும் அனைத்து ஐவுளித் தெரிவுகளுக்கும் வருகை தாருங்கள்

நியூ நல்லி சில்க்ஸ் — 121/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

நியூ ராசி சில்க்ஸ் — 70,71, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.

(C/24655)

★ மலிவு விற்பனை ★ மலிவு விற்பனை ★ மலிவு விற்பனை★ மலிவு விற்பனை★ மலிவு விற்பனை★



## WALK IN INTERVIEW

**POST OF LADY ACCOUNTS CLERK** - Equipment Unit Trust

மேற்படி பதவிக்குரிய தகைமைகள்:-

*கல்வித்தகைமை* : a) G.C.E.(A/L) With Computer Knowledge
b) Able to Maintain Accounts Books
c) Able to Converse both in English and Tamil with Customers

*வயது* : 20முதல் 35வரை

*உதவியாளர்* : ஆண் வயது 20 முதல் 30 வரை

*கல்வித்தகைமை*: G.C.E. (O/L)

மேற்படி பதவியில் அனுபவம் உள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*வேதனம்* : பேசித்தீர்மானிக்கப்படும்.

*நேர்முகத்தேர்வு* : காலம் 09.11.2002 (9.00 a.m.- 12 .00)

*இடம்* : **E.U.T.**

No.249, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ்.இந்துக் கல்லூரி முன்பாக)

(10196)





யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக தீபாவளித் தினத்தை முன்னிட்டு சிறப்புத்தள்ளுபடி விலையில்!

நவநாகரிக சேட், T.சேட், கோட்சூட், சூட் வகைகள்,
டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள்,
ரவுசர் துணிவகைகள்,
ஜம்பர் வகைகள், பட்டுச்சாறி வகைகள்,
பேபிகவுண் வகைகள், ஸ்கேட் &பிளவுஸ் வகைகள்,
சல்வார்கமீஸ் வகைகள், கவுண் வகைகள்
நவீன டிசைன்களில் பலரக சாறி வகைகள்



*அனைத்தையும் தீபாவளி அதிரடித் தள்ளுபடியில் பெற்றிட*

# மிலேனியம் பெஷன்

(பொம்பே பஜார்) *(மலாயன் கபே முன்பாக)*

10, மின்சாரநிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(C/24628)


# 7ஆவது பிறந்தநாள் வாழ்த்து



பெருமாள் கோவிலடி, கலைப்புலவர் வீதியைச் சேர்ந்த

**திரு.திருமதி விக்கினேஸ்வரன் (இலங்கை வங்கி) அமிர்தயோகநாயகி**

தம்பதிகளின் செல்வப் புதல்வி

## செல்வி V.கிருத்திகா (அஞ்சலி)

01.11.2002 வெள்ளிக்கிழமை அன்று தனது 7ஆவது பிறந்தநாளை யாழ்ப்பாணம் கலைப்புலவர் வீதியிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடினார். இவரை அன்பு அம்மா, அம்மப்பா, அம்மம்மா மாமன்மார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், வாமிச்சித்தி, அத்தான்மார் அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உறவினர்கள் அனைவரும் சகல கலைகளையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்போடு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
**திருமதி விக்கினேஸ்வரன் (இலங்கை வங்கி) அமிர்தயோகநாயகி**

*17, கலைப்புலவர் வீதி.*
*யாழ்ப்பாணம்.* (10213)


சுவைப்பிரியர்களே!

இதோ புதியதோர் அறிமுகம்!!

## ஜீவ மிக்ஷர்

*எமது தயாரிப்புக்களைக் கேட்டு வாங்குவீர்! சுவைத்து மகிழ்வீர்!!*

*Jeeva* பகோடா
*Jeeva* கடலை
*Jeeva* கச்சான் பருப்பு
*Jeeva* கடலைப் பருப்பு
*Jeeva* மரவள்ளிப்பொரியல்
*Jeeva* காரசேவ்
*Jeeva* இனிப்புசேவ்

இன்னும் பற்பல.

உங்கள் நன்மை கருதி ஜீவ தயாரிப்புக்கள் 'பைக்கற்'றில் அடைத்தே விற்கப்படுகிறது.

தற்போதைய முகவரி:

**PARA MASTER**

6, பிளர்ச்சஸ் ஒழுங்கை,
சுண்டுக்குளி.
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில்)

(10168)


# மரண அறிவித்தல்

## திருமதி சிவகுரு சறோஜினிதேவி

கேசாவில் பிள்ளையார் கோயிலடி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சிவகுரு சறோஜினிதேவி அவர்கள் 29.10.2002 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு (துரை)யின் அன்பு மனைவியும் இந்துமதி, ஜெயமதி, மதிவண்ணன் (டோகா), காந்திமதி, கலாமதி, சிறீமதி, மதிச்சந்திரன் (சுவிஸ்), மதிக்குமார் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாம்பசிவம் (டோகா), தங்கராஜா (கோப்பாய்), கமலேந்திரன் (தாவடி), நாகேந்திரராசா (திருநெல்வேலி), விக்னேஸ்வரன் (ரவி - காரைநகர்), டக்சினி (மீனா), சித்திரா, ரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுதர்சன், சுதா, சுகந்தன், சுபாஜினி, சாளினி, லோஜனா, நர்மிதா, ராதா, ராகுலன், திவிஜா, தனுஜா, புவிராஜ், அமல்ராஜ், நிமல்ராஜ், அகில்ராஜ், சந்துசன், பிருந்தாபன், அஸ்வினி, றூமினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3.11.2002) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*55, நாவலடி லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

(10226)

தகவல்:
மதிவண்ணன்,
மதிச்சந்திரன்
(மகன்).

# MARBLES FLOOR POLISHING



## SERVICES

(EUROPEAN STYLE)



**மாபிள்ஸ் நிலங்கள் மினுக்கும் சேவை**

பழைய றெறாசோ நிலங்களையும் ஏனைய நிலங்களையும் ஐரோப்பிய முறைப்படி மெஷின்மூலமாக மினுக்கி புதுமெருகூட்டி அழகாக்கிட நாடுங்கள்:

**மாபில்ஸ்**

| 42, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P.: 222 2328 | தொல்புரம், சுழிபுரம். T.P.: 222 5286 |
|---|---|

☛ நாம் முன்பு வேலை செய்த நிலங்களுக்கு கழிவு வழங்கப்படும்.

புதிதாகப் போடும் றெறாசோ வர்ண வேலைகளுக்கு ஓடர் எடுக்கப்படும்.

(சி-24637)


## ஆயுதமுனையில் கொள்ளை!

களுத்துறை நகரில் கடந்த வியாழனன்று மாலை வர்த்தக நிலையமொன்றிலிருந்து ஒரு லட்சத்து 95 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

ரி-56 துப்பாக்கி, கைத்துப்பாக்கி மற்றும் பயங்கர ஆயுதங்களுடன் வர்த்தக நிலையத்துக்குள் உட்புகுந்த நான்கு கொள்ளையர்கள், ஊழியர்களைப் பயமுறுத்தி இக்கொள்ளையை மேற்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர்.

வர்த்தக நிலைய அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 15 லட்சம் ரூபா பணம் கொள்ளையர் கண்ணிலிருந்து தப்பியுள்ளது. களுத்துறை தெற்கு பொலீஸார் தீவிர புலன் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கந்தையா பரராசசிங்கம்**

(ஓய்வுபெற்ற, காப்புறுதிக் கூட்டுத்தாபன எழுதுவினைஞர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.07.1929 | 24.10.2000 |

திதி: 03.11.2002

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்த் திகழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2ஆம் ஒழுங்கை,
மருதனார்மடம்.
(9469)

\- மனைவி, பிள்ளைகள்.

## பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்து

**கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய மாணவன்**

### செல்வன் சிகணலோஜன்



அவர்கள் 5ஆந் தரப் புலமைப் பரிசிற் பரீட்சை - 2002இல் 123 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டு அவரது 10ஆவது பிறந்த நாளாகிய இன்று (03.11.2002) ஞாயிற்றுக்கிழமை அவர் பல் கலையும் கற்று பல்லாண்டு வாழ்க என்று பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அத்துடன், அவருக்கு அறிவூட்டி வழிகாட்டிய பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் ரியூசன் ஆசிரியை யோகா அவர்களுக்கும் நன்றி கூறிப் பாராட்டுகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
அப்பா, அம்மா, தங்கைமார், தம்பிமார்,
அப்பம்மா, அம்மம்மா, அத்தைமார்,
மாமாமார், மாமிமார், பெரியப்பாமார்,
பெரியம்மாமார், சித்தப்பா, சித்திமார்,
அண்ணாமார், அக்காமார்,
மச்சான், மச்சாள்மார்.

*பூதர்மட ஒழுங்கை,*
*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*
(10205)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணவர் மகிழ்வில் 08 - 01 - 1960



விண்ணவர் வாழ்வில் 25 - 10 - 2000

### அமரர் கந்தப்பு தவராசா *(பவா)*

திதி: 03-11-2002

ஊக்கத்தோடு வேலை செய்யும்
உத்தம உறவொன்று.....
தாங்க முடியாத வேதனையில்
எம்மைத் தவிக்க விட்டு.....
விழி நீரில் தோன்றும்..... உங்கள்
இனிய முகம் தேடுகின்றோம்.

*கரவெட்டி மத்தி,*
*கரவெட்டி.*
(10091)

சோகத்தை நெஞ்சில் சுமந்து நிற்கும்:
**மனைவி, பிள்ளைகள்.**

## பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி 2003ஆம் ஆண்டுக்கான

# கேள்வி அறிவித்தல்

## (பொதுச் சந்தைகள், இறைச்சிக்கடைகள்)

பருத்தித்துறை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2003ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 2002.11.15ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்களை கேள்விப்பத்திரப்பணம், கேள்விப்பத்திரப்பணத்தின் 20% வி.ஏ.ரி.வரி, கேள்வி வைப்புப் பணம் ஆகியவற்றினைச் செலுத்துவதன் பேரில் பருத்தித்துறை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் 2002.11.14ஆம் திகதி பற்பகல் 3.30 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களைப் பூரணப்படுத்தி "தலைவர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி" என்ற முகவரிக்கு கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் குத்தகையின் பெயர் எழுதப்பட்டு, அரக்கு முத்திரையிட்டு பதிவுத்தபால்மூலம் 2002.11.15ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும் அல்லது குறித்த நேரத்திற்கு முன்னர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 2002.11.15ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ, பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரம் பெறுபவர்கள் அடையாள அட்டையையும் தவறாது கொண்டு வருதல் வேண்டும்.

இறைச்சிக்கடைக்கு விண்ணப்பப் படிவம் பெறுபவர்கள் தங்களது முன்னனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்டவர்களுக்குப் படிவம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் இதனைக் கண்டுபிடிக்கும் பட்சத்தில் அவரின் கேள்வியை நிராகரிக்கும் அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.

எந்தவொரு கேள்வியையும் அல்லது அதன் பகுதியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு அதிகாரம் உண்டு. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### அட்டவணை

| குத்தகை விவரம் | மீளளிக்கப் படாத கேள்வி பத்திரப் பணம் | கேள்வி வைப்பு பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வி.ஏ.ரி. நீங்கலாக) |
|---|---|---|---|
| 1. மந்திகை மாட்டிறைச்சிக்கடை | 300/- | 5000/- | 357202/- |
| 2. மானாண்டி மாட்டிறைச்சிக்கடை | 300/- | 3000/- | 67500/- |
| 3. மந்திகை ஆட்டிறைச்சிக்கடை | 300/- | 1500/- | 80200/- |
| 4. அல்வாய் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 300/- | 1500/- | 16400/- |
| 5. மந்திகை சந்தை | 300/- | 1500/- | 117000/- |
| 6. மானாண்டிச் சந்தை | 300/- | 1500/- | 64000/- |
| 7. பொற்பதி மீன் சந்தை | 300/- | 1500/- | 61000/- |
| 8. மணற்காடு மீன் சந்தை | 300/- | 1500/- | 26000/- |
| 9. கற்கோவளம் சந்தை | 150/- | 500/- | 3910/- |
| 10. கெருடாவில் சந்தை | 150/- | 500/- | 1000/- |

தலைமை அலுவலகம்,
பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி,
01.11.2002.
(C/24639)

**ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் J.P.U.M.**
தலைவர், பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### IN LOVING MEMORY OF



**Samual Lily Rajah**
பிறப்பு:- 19.05.1911



**Suresh Sivapatham**
பிறப்பு:- 12.01.1967



**Priyanthi Sivapatham**
பிறப்பு:- 24.05.1971



**Mahendraraj Sivapatham**
பிறப்பு:- 31.10.1972

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சங்களில் என்றும் நீங்காது நிலைத்திருக்கும்!

RAJAH MAHENDRAN, RAJAH INDRAN,
Mr.& Mrs. SIVAPATHAM & JANE SIVAPATHAM.
(9999)


"மனைக்கு வெளியே ஒரு மனை"
உங்கள் உணவகம்
ஜோ - எகட்டனின்

**ஜெசித்தாரா**

வழங்கும்.....
குங்குமப்பூ புரியாணி
\- DOUBLE CHICKEN
மாங்காய் சட்னியுடன் 110/= மட்டுமே.
வழமையான உணவுப் பொதிகள்
வழமைபோல நண்பகல் 12
மணிமுதல் 3 மணிவரை.

**ஜெசித்தாரா**

19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

*விசேட அறிவிப்பு:*
மேற்படி உணவகத்தில் பணி புரிய சமையலாளர், உதவியாளர்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும்.(10198)

# ரஷ்யாவில் உயர்கல்வி

## மருத்துவத்தில் MD

(ஆங்கில மூலமானது)

KURSK STATE மருத்துவப் பல்கலைக்கழகம் WHO இலங்கை மருத்துவக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

* ஆகக்குறைந்த அனுமதிக்கான தகைமை G.C.E.A/L
* ஏற்புடைய கற்கைநெறி, விடுதிக்கட்டணங்கள்

முதலாம் வருடம் - 3200 U.S.D.
இரண்டாம் வருடத்திலிருந்து 2800 U.S.D.
(கட்டணங்களை தவணைக்கட்டணங்களாகச் செலுத்தலாம்)

அனுமதிக்கும், மேலதிக தகவல்களுக்கும்

தொடர்பு: **Uthayajothy**
(Final Year Student in the University)
T.P.: Local 0777-984800, 01-334284
T.P.: Russia - 007071 2335823
E.Mail: uthayavan@yahoo.com

(C/24181)

# ஆறாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 - 03 - 1955



மறைவு 03 - 11 - 1996

## அமரர் அப்புக்குட்டி பன்னீர்செல்வம்

பாசத்தின் திருவுருவே! நீவிர் எம்மை
விட்டுப் பிரிந்து ஆறாண்டுகள் சென்றிடினும்
உம் நினைவில் எம் இதயம் வாழ்ந்திடும்...

*'உமாபதி' இமையாணன்,*
*உடுப்பிட்டி.*

*- குடும்பத்தினர்.*

(9995)

# மகாநதியின் தீபாவளிப் பரிசு

யாழ்ப்பாணத்தில்... சாவகச்சேரியில்...

உங்கள் தீபாவளியை இம்முறை மகாநதியுடன் கொண்டாடுங்கள்!

ஆடவரின் அந்தப்புரம்

ஆடையுலகில் ஓர் அற்புதம்!

மங்கையரின் ஆடைக் களஞ்சியம்!

## சிட்டுகளின் சிங்காரச் சோலை!

நவநாகரிக தோற்றத்துக்கான புடைவைகளின் சங்கமம்!

# மகாநதி புடைவையகம்

முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்குக் கைராசியான இடம்

16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

4, நவீன சந்தை,
சாவகச்சேரி.

சாறி பிளவுஸ் பீஸ்களுக்கு பிரத்தியேகக் காட்சியறை!

☎ 222 2552 16, நவீனசந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

(C/24499)

# 30ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர்

# அருணாசலம் கந்தையா

தோற்றம் 19-05-1926

மறைவு 06-10-2002

அன்புடனே அறிவூட்டி ஆற்றலோடு வழி நடத்தும்
பண்புடைய பெரியோனே சங்க உபதலைவனே
முன்னிருந்து பணி தொடங்கி முடிவுவரை நீயிருந்து
இன்றெமது நிலைஉயரச் செயல்புரிந்தாய்
மன்றிருந்து நீயுரைத்த மணிமொழிகள் இன்றுவரை
எம்மனத்தில் மறையவில்லை இனியவனே இனியெமது
எண்ணமதில் நீயிருப்பீர் இனியுயிர் சாந்திபெற
இதயத்தால் அஞ்சலிப்போம் இறையாசி வேண்டுவோம்.

*559, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

நிர்வாகம்
**யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.**

(C/24630)

| | | | |
|---|---|---|---|
| | | சனி ரா. | |
| | இராசிச் சக்கரம் | | வியா. |
| | | | |
| | கேது | சூரி. ▲ புத. வெ. | செவ். சந். |

**மாற்றம்:**

அத்தம் - கன்னி இராசியில் சந்திரன் நிற்கும்.

சமாதானப் பேச்சுக்கள் பல மாற்றங்களைக் கொடுக்கும். அரசியல் மாற்றம் அகிலத்தை அசைக்கலாம். உலக நாடுகளின் ஆதரவு வரும் சூழ்நிலை தோன்றும். இந்தியா முக்கிய சிந்தனைகளை மறைமுகமாகச் செயற்படுத்தும். இந்தியாவில் பதற்ற நிலை. தெற்கில் அரசியல் மாற்றம் ஏற்படும். மத்திய கிழக்கிற்கு சோதனைக்காலம். அழிவுகள் தொடரும். அமெரிக்கா கடுமையாக நடந்துகொள்ளும். ஈராக் - ஈரான் - பலஸ்தீனத்தில் தொடர்ந்து அழிவுகள் கொடுக்கும். பாரசீகக் குடாநாடுகளில் காற்று, அமுக்கங்களால் அழிவுகள் கொடுக்கும். இந்து சமுத்திர நாடுகளில் விட்டுவிட்டு மழை, காற்று அழிவுகளைக் கொடுக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

# இந்த வார இராசி பலன்

# 03.11.2002 ~ 09.11.2002

## மேடம்

ஏழைகள் நீதி கேட்பதாயின் அதிக காலம் போராடவேண்டி இருக்கும். பணக்காரர்களுக்கோ - அதிகாரத்திலுள்ளவர்களுக்கோ சொற்பகாலத்தில் சொற்பமுயற்சியில் நீதியாயினும் சரி, தீர்ப்புக் கிடைத்துவிடும். தொழில் ஸ்தானத்தில் நீதி கேட்க முற்பட்டு மனம் கலங்குவீர்கள். உதவிக்குப் போய் உபத்திரவப்படுவீர்கள், வாக்கால் காரியம் நடக்கும். என்ன கோபம் வருகின்றது உங்களுக்கு? தீய நணபர் திசை மாற்றுவர், பணவரவில் தாமதம், ஏமாற்றங்கள் வரும். அரசியல்வாதிகளின் உதவிகள், நாரிநோ, தலைப்பாரம் வரும். மாணவர்களுக்கு சித்திகள் வரும். பலசரக்கு வியாபாரம், மருந்துத்துறை, நீதித்துறை, தோட்டத்துறை போன்றவர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.*

## இடபம்

ஆண், பெண் இருவருக்கும் பொருத்தங்கள் இடைவெளி 16 கிரகபாவங்களுக்கு மேற்படலாகாது! மேற்பட்டால் பிரிவு, துன்ப, துயரப் போராட்ட வாழ்வு நிச்சயம் வரும். தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் நடக்கும். பிறரின் உதவிகள் கிடைக்கும். தூரச் செய்திகள் மகிழ்ச்சி தரும். சகோதரங்களை கோபிப்பீர்கள். எதிரிகளை வெல்லுவீர்கள். தெளிவின்மை, மாணவர்களுக்கு ஆசிரியர்களின் உதவிகள் கிடைக்கும். பிரயாணங்களில் பொருள் இழப்பு வரும். நெஞ்சுநோ, வயிற்றுநோ, உஷ்ணபீடைகள் என்பனவரும். இசைத்துறை, மருந்து, வாசனைப் பொருள்கள் விற்பனைத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் வரும்.

*அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.*

## மிதுனம்

திருமணப் பொருத்தத்திற்கு செவ்வாய் தோஷம் இருவருக்கும் பொருந்துகிறதா? என்பது மிக முக்கியம். பொருந்தாவிடில் பல துன்பங்கள் தேடிவரும். இரத்த உறவில் விரிசல், புத்திர சோகம் தவிர்க்கமுடியாமல் இருக்கும். தூரத்து உறவுமுறையினர் வருகை, தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளுடன் வாக்குக் கலகம் - இடமாற்றம் என்பனவும், வாய்வுத் தொல்லை, குடல் வருத்தம் என்பன ஏற்படும். செய்தித்துறை, நிர்வாகத்துறை, குருத்துறை, சந்தைத் துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், சனி.*

## கடகம்

காதலர்களுக்கு மதம், ஜாதி பெரிதல்ல? வாழ்வு, சாவு நிலைவரின் உறுதிநிலையில் இரு உள்ளங்களையும் ஒன்று சேர்ப்பது மிக முக்கியம். தொழில் ஸ்தானத்தில் வரும் பிரச்சினைகளைச் சமாளிக்க முயலுவீர்கள். எதிர்ப்பாலாரால் அவதிகள் ஏற்படும். நகை, புடைவை வரவுகள் ஏற்படும். தூரத்துச் செய்திகள் வரும். மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு ஆசிரியர்களின் உதவிகள் கிடைக்கும். வயிற்றுப்பொருமல், சலவருத்தம் - அடிக்கடி கோபம் என்பன வரும். அரசியல்துறை, காவல்துறை, மருந்துத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி.*

## சிங்கம்

உயர்பீடங்களில் உள்ள சிலர் நீதி, நியாயமற்ற முறையில் இரகசிய முறையில் அப்பீடங்களுக்கு வரும் பணத்தை சிலரின் உதவிகளுடன் சூறையாடி வருகின்றார்கள். இவர்களை அப்பீடத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் பத்திரிகைகளுக்கு அறிவித்து வெளிப்படுத்திவருவதில் தவறில்லை. தொழில் ஸ்தானத்தில் வாக்குக் கலகம் வரும். மேலதிகாரிகளால் கடுமைப்படுத்தப்படுவீர்கள். செலவுகள் அதிகரிக்கும். சகோதரங்களுக்கு நன்மை ஏற்படும். நாரிநோ, கை, கால்பிடிப்பு, சளி வருத்தம் என்பனவரும். மருந்துத்துறை, தோட்டத்துறை, பாதுகாப்புத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி.*

## கன்னி

பதவியில் உள்ளவர்களுக்கு பந்தம் பிடித்து, அவர்களின் செருப்புக்களைக் காவியோ, பலவித மறைமுக உதவிகளைச் செய்தோ வருவது பரம்பரை பரம்பரையாகப் பல சமூகங்களிடையே ஒருசிலர் இன்றும் செயற்படுத்திவருகின்றனர். தொழில் ஸ்தானத்தில் இப்படியானவர்களைக் கண்டு மனம் புழுங்குவீர்கள். இடமாற்றங்கள், மணப்பயம், உடல்களைப்பு, தடுமாற்றம் என்பன கொடுக்கும். நாரிநோ, கை, கால் உளைவு வரும். ஹோட்டல்துறை, வியாபாரத்துறை, பாதுகாப்புத்துறை, கட்டடத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

## துலாம்

எம்மிடம் கடவுள், நம்பிக்கை ஒன்றைத்தான் எதிர்பார்க்கின்றார். அதை நாம் என்றும் விடலாகாது. ஏனெனில், நம்பிக்கையற்றால் வாழ்வு ஒரு பம்பரம் போன்று சுழல ஆரம்பித்து நிலையற்றுப் போய்விடும். தொழில் ஸ்தானத்தில் ஒரு பதற்ற நிலை. உதவிகள் கிடைக்கும். அதிகார பீடத்தவர்களின் உதவிகள் கிடைக்கும். எதிர்ப்பாலார்களின் உதவிகள் கிடைக்கும். சகோதரங்களுக்கு உதவுதல். கலகங்கள், அபிப்பிராயபேதங்கள் வரல் என்பன வரும். உடல படபடப்பு, நாரிநோ, தலை சுற்றுதல் என்பன வரும். மருந்துத்துறை, நகைத்துறை, மின்சாரத்துறை, சட்டத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

## விருச்சிகம்

பலரை விழுத்தி ஒருவர் வாழ நினைப்பது மிகவும் வேதனைக்கு உரியது. இன்று எம்மத்தியில் எத்தனை சூழ்ச்சிகளை நாம் காணமுடிகின்றது. உங்கள் தொழில் ஸ்தானத்திலும் இந்நிலை வரும். வருவாய் அதிகரிக்கும். கலகங்கள். அயலவர்களால் வர இடம் உண்டு. தொண்டைநோ, சளி, கை, கால் வருத்தங்கள் என்பன வர இடம் உண்டு. மாணவர்களுக்கு நன்மைகள் ஏற்படும். வங்கித்துறை, குருத்துறை, தொழில்நுட்பத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

## தனுசு

உண்மைகள் என்றும் தூங்கிவிடாது. மனதில் வஞ்சகமில்லாத உங்களை எல்லோராலும் புரியமுடியாது. "அடிப்பதுபோல கோவம் உங்களுக்கு வரும் ஆனால், அதில் ஆபத்து இருக்காது" அடித்து அணைக்கும் கை உங்கள் கை. தொழில்ஸ்தானத்தில் பல மாற்றங்கள் தேடிவரும். புதிய திட்டங்கள் உருவாகும். அரச அதிகாரிகள் உதவுவார்கள். மாற்றங்கள் சகஜமாகும். நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். வாய்வுத் தொல்லை, வயிற்றுப்பொருமல், உஷ்ணபீடைகள் கொடுக்கும். பிரயாணத்துறை, நிர்வாகத்துறை, சந்தைத்துறை போன்றவர்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வியாழன், வெள்ளி, சனி.*

## மகரம்

புதிய பாதை, வாழ்விற்கு அடிகோலும்போது பலத்த போராட்டம் உங்களுக்கு மாத்திரமா? ஏற்படுகின்றது. தொழில்ஸ்தானத்தில் மனக்கசப்புக்கள் வரும். இடமாற்றங்கள் சகஜம், புதிய நண்பர்கள் உதவுவார்கள். பொருள் விடயமாக குடும்பத்தில் கருத்துவேற்றுமைகள் கொடுக்கலாம். தூரத்து உறவினர் வருதல். வாய்வு, விறைப்பு, கால்வருத்தம் என்பன வரும். விவசாயத்துறை, காவல்துறை, மின்சாரத்துறை, குருத்துறை போன்றவர்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும். மாணவர்களுக்கு இடமாற்றங்களும் பெரியவர்களின் உதவிகளும் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வியாழன், வெள்ளி, சனி.*

## கும்பம்

பலருக்கும் ஆப்புவைப்பவர் கடைசியில் அந்த ஆப்பில்தானே அகப்பட்டுப் போகின்றார். தொழில் ஸ்தானத்தில் ஒருவருக்கு இப்படி ஒரு நிலைமைவர இடமுண்டு. சனீஸ்வரன் பார்வையால் இடைக்கிடை பதட்டநிலை உருவாகும். எதிர்ப்பாலாருடன் கருத்துவேற்றுமை ஏற்படும். இனஜன வரவு, பெரியவர்களின் உதவிகள் கிடைத்தல், காணி பூமியில் திருத்தம், தாய்வழி உதவிகள் கிடைக்கும். நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். தூரத்துச் செய்திகள் சிலருக்கு மாற்றங்கள் கொடுக்கும். கால்வருத்தம், சளி, இருமல் என்பன வரும். இசைத்துறை, மருந்துச்சாமான்விற்பனை, குருத்தொழில் போன்ற துறைகளைச் சார்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வியாழன், சனி.*

## மீனம்

ஜப்பானிலும், இந்தியாவிலும் பிறப்பு, யாழ்ப்பாணத்தில் இறப்பு அங்கிருந்து வந்த வாகனங்கள் இங்கிருந்து இரும்புகளாகப் போகும் நிலை. நாமே போர்க்கால சூழ்நிலையால் வாழ்வா? சாவா? என வாழ்ந்துவரும் நிலை. சமாதானம் வராதா என ஏங்கும்நிலை? இப்படியாக பல துன்பத்தை அடைந்து வந்துள்ளோம் எனச் சிந்திக்கும் நீங்கள், உங்கள் பொருளாதார நிலையில் கவனமாக இருங்கள். நண்பர்களின் உதவிகள் கிடைத்தல், தூரத்துச் செய்திகள் வரும், காரிய சித்தி ஏற்படும். பிரயாணத்தில் நிதானம் பொருள் களவு போகலாம். சளி, கை கால்பிடிப்பு, நாரிநோ என்பன வரும். மருந்துத்துறை, குருத்துறை போன்ற துறைகளைச் சார்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வியாழன், சனி.* ★

**மகாதேவா ஜோதிடம்**

---

(ரி.ரி.என். நடத்தவுள்ள)

# வினா — விடைப் போட்டியில் பங்குபற்றும் மாணவர் விவரம்

யாழ்ப்பாணம்,நவ.2

குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களிடையே தமிழ் தொலைக்காட்சி இணையம் (ரி.ரி.என்) நடத்தும் வினா விடைப் போட்டியில் பங்கேற்கும் மாணவ மாணவியரின் ஒரு தொகுதியினரின் பெயர்கள் பாடசாலை ரீதியாக கடந்த வியாழன் உதயனில் வெளியாகியிருந்தன. மிகுதிப் பெயர் விவரங்கள் இன்று பிரசுரமாகின்றன.

**கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

குமாரசாமி மதனகுமார், தவராசா சோபிகா, தம்பியப்பா ஜெயதேவி, விஸ்வலிங்கம் ரோகினி, ஈஸ்வரதாசன் தேன்மொழி, திருநாவுக்கரசு தீருமாலினி, அருமைத்துரை நிடிலா, சிவஞானம் கோமளதேவி, சுப்பிரமணியம் கேதாரணி, செல்வரட்ணம் சுவர்ணா, நடராசா புஸ்பாஞ்சலி, செல்வராசா காந்திமதி,

**செங்குந்த இந்துக் கல்லூரி**

தில்லைவாசன் பிரியதர்சினி, சண்முகநாதன் சசிதா, அமிர்தநாதன் செபஸ்ரியன், சிறிதரன் சிந்துஜா, சிவநேசன் நளாயினி.

**ஸ்ரான்லிக் கல்லூரி**

ஜெகசோதி அமிதாப், குணரத்தினம் ஜீவிகா, லோறன்ஸ் கோவ்றன், தம்பிராசா பிரியந்தி, சண்முகலிங்கம் மேனகா.

சந்திரகுமார் சுவப்னா, வைரமுத்து விஜிதரன், பூபாலசிங்கம் கலைச்செல்வி, மகேஸ்வரன் மலர்விழி, வல்லிபுரநாதன் பிரிந்தாஜினி, சற்குணராசா விக்னேஸ்வரன், பண்டாரம் மேனகா, சுப்பிரமணியம் சிவதர்சன், குணரெத்தினம் பரமராசா.

**புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை**

யோகமணி டியோப்றா, வால்டர் ஜெறாட் றெஜிமலா, கனகசபை பிரதீபா, தின்னப்பு றொசானா பொடஸ்ரா, சாள்ஸ் எமிலியான் யாழினி, கிறிஸ்ரியன் மேரி நிறோஜினி.

**புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்**

கிறிஸ்தோப்பிள்ளை பத்மராஜி, இம்மானுவேல் மேரி, அடைக்கலம் லூசி, கிறிஸ்துராசா மேரிகியூரிஸ்ரா, முஹம்மது றமீன் மரியகொன்சிபரா.

அரியதாஸ் சகாயராசா, ஜோசேப் அன்ரன் சாம்சன், ஜேசுமரியதாஸ் கிறிஸ்ரீனா செல்வறாஜி, மரியநாயகம் அன்ரனி வசந்தராஜ், சகாயராசா ஈக்ட்சன்.

சாள்ஸ் மரிய கொன்சலா, அந்தோனிப்பிள்ளை அனித்தா, மேரி கிறேபிணா அருளப்பு, தெய்வேந்திரன் தர்சன்.

**சுண்டிக்குளி மகளிர் கல்லூரி**

வேலாயுதபிள்ளை நீற்றா பிரியதர்சினி, மயில்வாகனம் அனுஷா, சச்சிதானந்தம் மயூரதி, இராசநாயகம் ஜனனி, கனகரட்ணம் மஞ்சுளா.

ஜெகநாதன் பிரதீபா, நடராஜா கிருத்தியா, யோகரட்ணம் வானதி, சிமியோன் தயானி, தனபாலசிங்கம் சுகன்யா.

பவளநாதன் நிருசாந்தி, மிருணா மைக்கல், அன்ரன் வலன்ரைன் சந்திரிக்கா சுகந்தினி, ஜெயகுணரூபன் ஜெயப்பியூலா, சீவரத்தினம் இந்திரா பிரியதர்சினி, சிறிதரன் அம்பிகா, தனேந்தினி தனேந்திரகுமாரன்.

**வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

ஜெரீனா தங்கவேல், விஜிதா சக்திவேல், காயத்திரி செல்வரத்தினம், பத்மலோஜினி பரமேஸ்வரன், லாவண்யா சண்முகதாஸ், வர்மினா புவனேந்திரன், சுன்மினி சிவபாதசுந்தரமூர்த்தி, கொவஸ்ரிக்கா ஆஷா அழகராசா, பாலநந்தினி சரவணபவானந்தன், நர்மதா நாகேந்திரராசா, இராமவித்தியா இராமச்சந்திரன், அனோஜ் நிஷாந்தி ஜெயச்சந்திரன், திவ்வியா இராசதுரை, லலிசா பிரியதர்சினி பிரான்சிஸ், தினோஜா சீவரட்ணம், ரிசானி தர்மலிங்கம், இராமச்சந்திரன் மாதங்கி.

**யா/சென்ஜோன்ஸ் கல்லூரி**

நல்லை வரோதவன் கஜானந், சிறீஸ்கந்தராசா துஸ்யந்தன், கோபாலசிங்கம் நிருத்திகன், விமலதாஸ் உமேஷ், லோகேஸ்வரன் மயூரன், முருகையா துஷ்யந்தன், இரவீந்திரகுமாரன் நிசாந்தன், தில்லைநாயகம் துஷ்யந்தன், பாஸ்கரன் சாந்தகுமார், சயகுமாரன் சியாந், கனகேஸ்வரன் ராஜிவ், கந்தஞானி தர்சன், பிறேமச்சந்திரன் ஜதர்ஷன், விநாயகமூர்த்தி சுஜீவன், பஞ்சலிங்கம் பிரதீபன், தர்மகுலசிங்கம் மயூரன், யோகராசா கிஷானந்த், சண்முகானந்தன் நவதர்சன், சிவபாதம் பிரியதர்சன், குகதாசன் ஜினேஸ்குமார், மனோரஞ்சன் கிறிஸ்ரிநிரோஜன், குணபாலசிங்கம் கோபிகன், தங்கராசா தலெளஷகன், விமலதர்மஜயா ஞானரூபன், விஜயகாந்தன் அரவிந்தன், மகேஸ்வரன் பிரதீஷ், கிருபானந்தன் கோபாலரட்ன.

**யா/திருக்குடும்பக் கன்னியர்மடம்**

டர்லின் நிருஷா சத்தியநேசன், செபோஜினி செபஸ்ரியாம்பிள்ளை, டெல்சியா கிளபோடாசியஸ், மரியற்றா றொசானி பேர்னாட், அனிற்றா லக்ஷைக்கா யோன்வில்சன், லூமென்டா அன்ரன் குலசேகரம், மரியநாயகம் மேரி சுவீற்சினி, முத்துக்குமாரசாமி லோஜினி, பிறேமாஜினி சிவபாலன், சிந்துஜா ஆனந்தராசா.

**யா/இந்துக் கல்லூரி**

ஜெகதீஸ்வரன் பிறேம்குமார், கோபாலகிருஷ்ணன் நிசாந்தன், கனகநாயகம் சயந்தன், மகாதேவா கலாரூபன், சிவலிங்கம் சனாதனன், அரசரட்ணம் அபிர்வர்சினி, செல்லத்துரை காயத்திரி.

**கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**

ஜெயபாலகிருஷ்ணன் துஷா.

**யா/மத்திய கல்லூரி**

சிவநேசன் மயூரன், துரைசிங்கம் நோவா, செல்வம் அசோக், தேவதாசன் அஜந்தன், இரவீந்திர சர்மா கிரிதரன், சிவசுப்பிரமணியம் சுரேஸ்குமார், மகாதேவா மகிந்தராஜ், நவரட்ணம் பிரதீபன், நாகராசா திவாகர், துரைசிங்கம் யதுகுலன், தம்புத்துரை சறுகுணராசா, சாம்பசிவம் தயாகரன்.

**கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்**

சின்னத்துரை சிவாகரன், ராதிகா குமாரசாமி.

**யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி**

இராசரத்தினம் தர்மேந்திரா.

**யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்**

ஆறுமுகமுதலியார் மிருளாயினி, சுந்தரலிங்கம் கோகுலராஜ், பரராஜசிங்கம் சந்திரகுமார், சிவா திலக்.

**யா/வைத்தீஸ்வராக் கல்லூரி**

தயாபரன் நிறஞ்சன், ஜெயராமன் ஞானசௌந்தரி, செல்வநாயகம் சகிலன், செல்வேந்திரன் செல்வரூபன், பிரதீபா ஏரம்பமூர்த்தி.

**யா/இந்து மகளிர் கல்லூரி**

ஜெயப்பிரபா ஜெகதீஸ்வரன், ராதிகா முருகையா, பாக்கியநாதன் கீர்த்தனா, தங்கராசா அனோஜா.

**யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்**

லிங்கரட்ணம் நிரஞ்சனா.

**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**

தர்மலிங்கம் கார்திகா, பத்மகுமார் விஜயதீபன், தஷாயினி அம்பலவாணர், தம்பிராசா சுகாஜினி, தனுஷா பரமேஸ்வரன், சிவநாதன் திருக்குமரன், சிவறூபா சின்னக்கோன், தம்பிரத்தினம் மயூரன், கௌசல்யா விநாயகமூர்த்தி, இராசேந்திரம் பார்த்தீபன், ஜெயராசா வனிதா, தம்பாப்பிள்ளை அம்பாலிகா.

## ஐரோப்பிய நாட்டில் கல்வி வாய்ப்பு

ஐரோப்பிய நாட்டில் உயர் கல்வி வாய்ப்புகளுக்கான ஒழுங்குகள் உடன் செய்துதரப்படும். தகுதியானவர்கள் தமது சுயவிவரத்துடன் நேரில் வரவும்.

**M.நடராஜா,**
C/O சந்திரசேகரம்,
புதிய ரயில்வே ஸ்ரேசனடி, கண்டி வீதி, மீசாலை, சாவகச்சேரி.

(10084)



## The 51st Annual Festival of CAROL SINGING

By: **The Youth of the North**
**At The Peto Memorial Hall**
**St.John's College, Jaffna.**
On Saturday 9th November 2002
**at 4.30 p.m.**
Admission by Programme Rs. 10/=

(C/24547)


## நெஞ்சம் சுமக்கும் ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 22 - 10 - 1945



உதிர்வு 29 - 10 - 1997

### அமரர் நாகரத்தினம் செல்வரத்தினம்

*B.Sc.(Eng.) Hon., M.Eng. Sc. (Australia), M.I.C.E. (London), M.I.E. (Sri Lanka)*
(முன்னாள் வடமாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை)

**திதி: 03-11-2002**

*குடும்பத்தின் குலவிளக்காய்*
*குவலயம் போற்ற வாழ்ந்த*
*எம் அன்புத் தந்தையே!*
*காலத்தால் அழியாக் காவியமாகி*
*நேசத்தில் எல்லாமாய் நிறைந்து*
*பாசப்பிணைப்புடன் எம்மை*
*வழிநடத்தி வாழ்விக்கும்*
*உங்கள் நினைவுகள், காலங்கள்*
*நகர்வதால் மறந்திடல் இல்லை!*
*என்றும் பசுமையாய் எம்*
*நெஞ்சம் சுமக்கும் நினைவுகளாகும்.*

*40/3, புகையிரதப் பாதை கிழக்கு ஒழுங்கை.*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (10019)

என்றும் உங்கள் நினைவில்:
**மனைவி, பிள்ளைகள்.**

## நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 24 - 03 - 1924



மறைவு 12 - 11 - 2001

### அமரர் கந்தையா பொன்னையா

*(பேராலை, பளை)*

*அன்பும் பண்பும் இருப்பிடமாய்*
*ஆற்றுப்படுத்தலும் அரவணைப்பும் உறைவிடமாய்*
*இன்சொல்லும் புன்சிரிப்பும் நிரந்தரமாய்*
*ஈகையிலே தனக்கோர் தனியிடமாய்*
*வாழ்க்கையிலே உதாரண மனிதனாய்*
*வாழ்ந்து காட்டிய எம் ஐயாவே.*
*ஆண்டொன்று சென்றதையா! ஆயினும்*
*ஆறவில்லை எம் மனங்கள்*
*ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்*
*ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.*

*கற்புலம் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (10117)

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## ஏலவிற்பனை அறிவித்தல்

இதன்கீழ் விவரிக்கப்பட்டுள்ள பொருள்கள் 2002.11.05ஆம் திகதி கீழ்க்குறிப்பிட்ட உப அலுவலகங்களில் அவற்றுக்கெதிரே குறிப்பிட்ட நேரத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். (அலுவலக நேரத்தில் குறித்த இடங்களில் பொருள்களைப் பார்வையிடலாம்) ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் அன்றைய தினம் ரூ.100/-ஐ வைப்பாகச் செலுத்திப் பங்குபற்றமுடியும். அத்துடன் சித்திபெற்ற ஏலதாரர் அன்றையதினமே பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதுடன், பொருள்கள் அனைத்தையும் அப்புறப்படுத்தல் வேண்டும்.

**01. சுன்னாகம் உப அலுவலகம் - காலை 10.30 மணி.**

01. மரத்தினாலான யன்னல் நிலைகள் - 5"X3" இரண்டுவெளிகள் 8' 3"X8' - எண்2. (யன்னல் ஒன்றிற்கு குறுக்கே 3/4" விட்டமுடைய 3'-9" கம்பியும், 6'-5"X11"-0" கம்பிவலையும் பொருத்தப்பட்டுள்ளது.)
02. மரத்தினாலான யன்னல் நிலைகள் - 2'X21/2" மூன்று வெளிகள் 6'-5"X11'-0" - எண்2.
03. மரத்தினாலான கதவுநிலைகள் - 4"X3" : 5' - 0"X8'-6" - எண் 2.

**02. உடுவில் உப அலுவலகம் - காலை 11.15 மணி.**

01. பனை வளை 16' - எண் 1
02. பனை வளை 6"X2" - 10'-8' - எண் 1, 1.
03. பனைமரம் 111/2', 91/2', 5', 6' - எண் 10, 02, 08, 26.
04. சலாகைகள் - 24 துண்டுகள்.
05. சலாகைகள் 6'2"X1" - 11', 7', 6' - எண் 30, 3, 2, 1.
06. ஓடுகள் - எண் 575.
07. பனம் கப்பு - 7" விட்டம் - 7'10" - எண் 03
08. கைமரம் - 4"X2" - 8',5',7',12' - எண் 14, 06, 01, 01
09. அரிந்தமரம் 4"x2" - 6'3" - எண் 05
10. அரிந்த மரம் - 6"X6" - 10'0" - எண் 02.
11. வெற்றுத்தார் பரல்கள்: 01. 172 லீற்றர் கொள்ளளவுடையது - 145
    02. 140 லீற்றர் கொள்ளளவுடையது - 185

*வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.*
*2002.11.01.*

(சி-24647)

**க.கமலசேகரன்** *ஜே.பி.யு.எம்.*
*தலைவர்.*

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## 2003ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

### (பொதுச் சந்தை, இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2003ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2003ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முப்பத்தொராம் திகதி வரையிலான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 2002.11.08ஆம் திகதி பி.ப. 2.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் யாவும் வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் உரிய கேள்விவைப்புப் பணம், கேள்விப் படிவப் பணத்துடன் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியையும் (VAT) செலுத்துவதன் பேரில் 2002.11.07ஆம் திகதி பி.ப. 2.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை *"தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்"* என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை *"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்"* என்ற முகவரிக்கும் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் குத்தகையின் பெயர் எழுதப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 2002.11.08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும் அல்லது குறித்த நேரத்திற்கு முன்னர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படவேண்டும். கேள்விப்பத்திரங்கள் 2002.11.08ஆம் திகதி பி.ப. 3மணிக்கு பிரதேச சபை தலைமை யலுவலகத்தில் கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ, பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர் அடையாள அட்டையையும் தவறாது கொண்டுவருதல் வேண்டும். தங்கள் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டால், தனியார் காணிகளில் இறைச்சிக்கடை நடத்துவதற்கு காணிச் சொந்தக்காரருடன் செய்துகொண்ட உறுதிப்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் பிரதியை சமர்ப்பித்தல்வேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள் சபையில் பெற்ற பின்னர் உரிய முறைப்படி விண்ணப்பிக்காவிடில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் நேரத்திற்கு முன்னதாக சபைக்கு ஒப்படைக்கவேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் கேள்விவைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

எந்தவொரு கேள்வியையும் அல்லது அதன் பகுதியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு அதிகாரம் உண்டு. சந்தைகளை குத்தகைக்கு பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருள்களின் பெறுமதியில் 3% இற்கு மேல் வரி அறவிடக்கூடாது.

இது சம்பந்தமாக மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை | கேள்வி பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஆகக்குறைந்த மதிப்பீட்டுத் தொகை (வற்வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| *1. சுன்னாகம் உப அலுவலகம்* | | | | |
| 1. சுன்னாகம் மத்திய சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | - | 500/- | 5,000/- | 2317,000/- |
| 2. உடுவில் கிளிச்சந்தை | - | 150/- | 1,500/ | 68,250/- |
| 3. உடுவில் ஆலடிச்சந்தை | - | 150/- | 500/- | 5,000/- |
| 4. சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை | 100/- | 200/- | 2,000/- | 551,775/- |
| 5. சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 150/- | 1,500/ | 57,800/- |
| 6. சுன்னாகம் கருவாட்டுக்கடை இல.3 | 60/- | 50/- | 100/- | 11,000/- |
| 7. சுன்னாகம் கருவாட்டுக்கடை இல.4 | 60/- | 50/- | 100/ | 8,925/- |
| 8. சுன்னாகம் கருவாட்டுக்கடை இல.5 | 60/- | 50/- | 100/ | 13,000/- |
| 9. சுன்னாகம் கருவாட்டுக்கடை இல.6 | 60/- | 50/- | 100/ | 5,550/- |
| 10. சுன்னாகம் கருவாட்டுக்கடை இல.7 | 60/- | 50/ | 100/ | 8,925/- |
| *2. உடுவில் உப அலுவலகம்* | | | | |
| 1. மருதனார்மடம் சந்தை (துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் உட்பட) | - | 500/- | 5,000/ | 2213,000/- |
| 2. இணுவில் சந்தை | - | 100/- | 1,000/ | 42,000/- |
| 3. இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 150/- | 1,500/- | 31,600/- |
| 4. தாவடி ஆட்டிறைச்சிக்கடை | - | 150/- | 1,500/- | 40,000/- |
| 5. தாவடி தெற்கு மாட்டிறைச்சிக்கடை | - | 150/- | 1,500/- | 56,000/- |
| 6. உடுவில் மல்வம் மாட்டிறைச்சிக்கடை | - | 150/- | 1,500/ | 58,500/- |
| *3. ஏழாலை உப அலுவலகம்* | | | | |
| 1. ஏழாலை சந்தை | - | 250/- | 1,000/ | 12,600/- |
| 2. ஏழாலை-மயிலங்காடு மாட்டிறைச்சிக்கடை | - | 150/- | 1,500/- | 46,700/- |


*குறிப்பு: கேள்விக்காரர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையுடனும், அது தொடர்பான ஏனைய கட்டணங்களுடனும் (வாடகை, கொல்களக் கட்டணம், உரிமக் கட்டணம்) 20% பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (வற்)யையும் செலுத்துதல் வேண்டும்.*

*வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.*
2002.10.31.

(சி-24645)

**க.கமலசேகரன்** ஜே.பி.யு.எம்.
***தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.***

# நகரில் தீபாவளி கலகலப்பு!



தீபாவளிப் பண்டிகைக்காகப் பொருள்களை வாங்குவதற்காக பெரும் எண்ணிக்கையானோர் யாழ்நகரப் பகுதிக்கு வருவதால் நகரில் சனநெருக்கடி. நேற்று முற்பகல் நகரின் ஒரு பகுதியில் காணப்பட்ட மக்கள் கூட்டத்தையே படத்தில் காண்கிறீர்கள். (படம்: தேவராஜன்)

# தமிழ் ஆவணக் காப்பகத்துக்கு வெளியீடுகளை அனுப்ப வசதி

யாழ்ப்பாணம்,நவ.3

தனது சுயமுயற்சியால் தமிழர் வரலாற்று ஆவணங்களைச் சேகரிக்கும் முயற்சியில் நீண்டகாலமாக ஈடுபட்டிருக்கும் குரும்பசிட்டி கே.கனகரத்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ளார்.

பத்திரிகைகள் மற்றும் வெளியீடுகள் போன்றவற்றை நவீன நுண்படங்களாக்கி ஆவணப்படுத்திவரும் இவர், தமிழர் பிரதேசங்களில் வெளிவந்த சகல வெளியீடுகளையும் ஆவணப்படுத்த நடவடிக்கை எடுத்துவருகிறார்.

தங்கள் வெளியீடுகளை ஆவணப்படுத்த விரும்புவோர் தொடர்புகொண்டால் தனது முயற்சிகள் வெற்றியடைய வாய்ப்புக்கிட்டும் என்று குரும்பசிட்டி கனகரத்தினம் கூறுகிறார்.

கண்டியைத் தளமாகக்கொண்டு வாழும் இவரது 'உலகத்தமிழர் ஆவணக் காப்பகம்' தமிழர் பிரதேசங்களில் வெளிவந்த பத்திரிகைகள், வெளியீடுகள் பலவற்றை ஆவணமாக்கி அவை தொடர்பான விவரங்களை வெளியிட்டிருக்கிறது.

தமிழ்பேசும் மக்களின் கடந்த சுமார் நூறுவருடகால வரலாற்றை உள்ளடக்கிய பல ஆவணங்களை அவர் நுண்படப் பிரதிகளில் வடித்துள்ளார்.

அவற்றில் சில வருமாறு:-

தேசாபிமானி(1864), இந்து சாசனம்(1899-1929), 'ரைம்ஸ் ஒவ் சிலோன்' பத்திரிகையின் யாழ்ப்பாண சிறப்பிதழ்-1924), ஈழகேசரி(1930-1957), சுதந்திரன்(1947-1982), கேசரி(1946-1948), ரிபியூன்(1954-1982), விடுதலை(1967- 1973), இண்டிப்பென்டென்ற்(1977-1978), சற்றடே றிவியூ(1982-1990), 'லங்கா கார்டியன்'(1982-1999), திசை(1989- 1990), சரிநிகர்(1990-2001), தினமுரசு (1993-2001), 'லண்டன் தமிழ் ரைம்ஸ்'(1996-2001), வான்முரசு, பிரான்ஸ் ஈழமுரசு(1996-2001), இடி(2001).

இவற்றைவிட தனிநாயகம் அடிகளின் தமிழர் பாரம்பரியம், தமிழீழப் பத்திரிகைகளில் வெளிவந்த அரசியல் ஆக்கங்கள், 7ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டுரைகள், தந்தை செல்வாவின் நூல்கள், நாடாளுமன்ற உரைகள், சன்சோனி ஆணைக்குழு அறிக்கை(1977), 1977 கலவரம் தொடர்பான நாடாளுமன்ற விவாத அறிக்கைகள், யாழ். நூலக எரிப்பு தொடர்பான உரைகள், ஆவணங்கள் என்பனவும் நுண்படப் பிரதிகளாக உருவாக்கிப் பேணப்பட்டுள்ளன. (ஐ)

## கிரிக்கெட்கழகத்துக்கு ஜனசக்தி உதவி

யாழ்ப்பாணம்,நவ.3

யாழ்.கிரிக்கெட் கழகத்தின் உள்ளகப் பயிற்சிக்களத்தின் தரத்தைப் பேணுவதற்கு ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் உதவ முன்வந்துள்ளது. மூன்றாண்டு காலத்திற்கு மாதம் 3 ஆயிரம்ரூபா வீதம் இவ்வுதவி வழங்கப்படும் என்று ஜனசக்தி நிறுவனத்தின் உதவிச்சந்தைப்படுத்தல் முகாமையாளர் யாழ். கிரிக்கெட் கழகத்துக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# யாழ்நகரில் களைகட்டும் தீபாவளி வியாபாரம்

யாழ்ப்பாணம்,நவ.3

யாழ்நகரில் தீபாவளி வியாபாரம் களைகட்டத் தொடங்கியுள்ளது. கொழும்பிலிருந்து வியாபாரிகளால் எடுத்துவரப்பட்ட பொருள்கள் யாழ் நகரத்தின் நடைபாதைகளில் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன.

உடுபுடைவைகள், பிளாஸ்ரிக் பொருள்கள், எவர்சில்வர் பாத்திரங்கள், தங்கமுலாம் பூசப்பட்ட நகைகள், அப்பிள், தோடம்பழம் ஆகியவை நடைபாதையில் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் இவற்றைக் கொள்வனவு செய்வதற்கு கூடும் மக்களினால் யாழ்நகர வீதிகளில் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏறபட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியின் முன்பக்கம், மின்சார நிலைய வீதியின் இரு பக்கங்கள், கஸ்தூரியார் வீதி ஆகியவைகளில் நடைபாதை வியாபாரம் தற்போது நடைபெற்றுவருகிறது.

(எ-51-10-8-4)

# குடாநாட்டு மீனவர் பிரச்சினை; ஆராய தெற்கில் இருந்து குழு!

குருநகர்,நவ.3

வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நேரில் கண்டறியும் நோக்குடன் நீர்கொழும்பில் இருந்து தேசிய மீனவ ஒழுங்கமைப்புக்குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ளது.

கடந்த 29ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்த இவர்கள் வடமராட்சி, தீவகம், மண்டைதீவு ஆகிய இடங்களுக்கு நேரில் சென்று அங்குள்ள மீனவர்களுடனும், மீனவ மக்களுடனும் உரையாடி அவர்களது பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டனர்.

அத்துடன் வடமராட்சிக்குச் சென்ற இவர்கள் யாழ்மாவட்ட கடற்படையினரின் அரசியல் பொறுப்பாளர் பாரதியுடன் கலந்துரையாடினர்.

கடந்த வெள்ளியன்று முற்பகல் 10 மணியளவில் யாழ்.ஆயர் இல்லத்துக்குச் சென்ற இவர்கள், ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையுடன் யாழ் நிலைவரங்கள் குறித்து உரையாடினர்.

அத்துடன் அன்றையதினம் யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் காரியாலயத்தில் சமாசத் தலைவர் சி.தவரட்ணம் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் பங்கேற்றனர். யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜீ.ஜீ.கஜேந்திரகுமார், ஆ.விநாயகமூர்த்தி ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

தென்னிலங்கையிலிருந்து வருகைதந்த இக்குழுவில் பத்திரிகையாளர்கள் மற்றும் புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு, மாத்தளை, அம்பாந்தோட்டை, குருணாகல் ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் சுமார் 25பேர் அடங்கியுள்ளனர்.

(எ-51)

# குடாநாட்டு கடலுணவுகளுக்கு தென்பகுதியில் சந்தைவாய்ப்பு!

## விரைவில் உருவாகும் என்கிறார் சமாசத்தலைவர்

கொழும்புக்கான கடலுணவு ஏற்றுமதி வெகுவிரைவில் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ளது என சமாசத் தலைவர் சி.தவரட்ணம் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது இரவு பகல் மீன்பிடி நடைபெற்றுவருவதனால், பிடிக்கப்படும் மீன்களை சந்தைப்படுத்த வசதியில்லை. இதனால், அவை பழுதடையக்கூடிய நிலை உருவாகியுள்ளது.

எனவே, யாழ்.மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கடலுணவுகளைப் பெற்று கொழும்புக்கு அனுப்பி அவைகளை கொழும்பில் சந்தைப்படுத்தும் முயற்சியில் வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஈடுபட்டுவருகிறது என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-51)

## மதுவரி அலுவலகங்கள் புதிய இடத்தில்

யாழ்ப்பாணம்,நவ.3

மதுவரித் திணைக்களத்தின் முக்கிய மூன்று அலுவலகங்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முதல் யாழ்.செயலகத்தின் முன்பாக, கச்சேரிகிழக்கு வீதியில் உள்ள தனியார் கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளன.

முன்னர் அரியாலை, பாரதி வீதியில் இயங்கிவந்த யாழ்.மதுவரித் திணைக்களம், யாழ். வீதியில் இயங்கிவந்த மதுவரி உதவி ஆணையாளர் அலுவலகம் மற்றும் மதுவரி அத்தியட்சகர் அலுவலகம் ஆகிய மூன்றுமே இவ்வாறு புதிய இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளன.

(எ-5)

# விநாயகமூர்த்தி எம்.பி. மண்டைதீவுக்கு விஜயம்

யாழ்ப்பாணம்,நவ.3

மண்டைதீவுக்கு மீளக்குடியமர்ந்துள்ள மக்களை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.விநாயகமூர்த்தி நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மீளக்குடியமர்ந்த மக்கள், தங்கள் சொந்த வீடுகளில் குடியமர முடியவில்லை என்றும் -

தமது சுமார் 75 வீடுகள் படையினர் வசம் உள்ளன என்றும் -

அந்த வீடுகளில் தாங்கள் குடியமர ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் - மண்டைதீவு மக்கள் கோரினர்.

சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு படையினர் வசமுள்ள வீடுகளை ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பதாக விநாயகமூர்த்தி எம்.பி. உறுதியளித்தார்.

அதைத் தொடர்ந்து மண்கும்பான், அல்லைப்பிட்டி, வேலணை ஆகிய இடங்களுக்கும் அவர் சென்றார்.

(ஐ-3-88)

## 'கியூடெக்' உதவி

தென்மராட்சி,நவ.3

'கியூடெக்' நிறுவனத்தினர் கல்வயல், மட்டுவில், சரசாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்ப உழைப்பாளர்களை இழந்துள்ள விவசாயக் குடும்பங்களுக்கு விதை நெல் மற்றும் உரவகைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

(எ-117)

# யாழ்.விவசாயிகளுக்கு பழமரக்கன்று கிடைக்கும்

## இலவசமாக விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.3

யாழ்.மாவட்டத்தில் பழமரச் செய்கையினை ஊக்குவிக்கும் வகையில விவசாயத் திணைக்களத்தினால் விவசாயிகளுக்கு இலவசமாக பழமரக் கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

வாழை, தேசி, மா, கொய்யா, பப்பாசி ஆகிய பழமரக்கன்றுகளே இவ்வாறு வழங்கப்படவுள்ளன.

வாழைக்குட்டிகள் கால் ஏக்கர் நிலத்திலும் ஏனைய பழ மரக்கன்றுகள் எட்டில் ஒரு பங்கு ஏக்கர் நிலத்திலும் பயிரிடும் வகையில் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு விவசாயப் போதனாசிரியர் பிரிவிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கே பழமரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன என விவசாய உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(எ-180)

# விசர்நாய்க் கடியால் மரணம்

யாழ்ப்பாணம்,நவ.3

விசர்நாய்க் கடிக்கு இலக்கானவர் தடுப்பூசி ஏற்றத்தவறியதால் பரிதாபகரமாக மரணத்தைத் தழுவிக்கொண்டார்.

சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான கந்தையா தேவராஜா (வயது 25) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

கடந்தமாதம் 14ஆம் திகதி இவரையும் ஏனைய நான்குபேரையும் சாவகச்சேரி நகரப் பகுதியில் வைத்து விசர்நாய் ஒன்று கடித்தது என்றும்-

எனினும், ஏனைய நால்வரும் ஏ.ஆர்.வி.தடுப்பூசியை ஏற்றிக்கொண்டனர் என்றும் - கூறப்பட்டது.

எனினும், இறந்தவர் தடுப்பூசியை ஏற்றாது கவனயீனமாக இருந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் வியாழனன்று உயிரிழந்தார்.

(எ-12)

# இறந்தோருக்கு நாம் செய்யக்கூடியது அவர்கள் பணிகளைத் தொடருவதே!

இந்த வையத்துள் வாழும் எம் அனைவரையும் உள்ளே இருக்கும் ஆன்மாவே கொண்டு செலுத்துகின்றது. இந்த ஆன்மாவை மாசு, மறு அற்றதாக, உயரிய மதிப்பும், ஆற்றலும் உள்ளதாக இறைவன் எமக்கு வழங்கினார். அந்த உயிரை தூய்மையானதாக - கடவுளுக்கு உகந்ததாக- மீண்டும் அவரிடம் கையளிக்கவேண்டும். எனவே, மானுட வாழ்வின் சொற்பகாலத்தைத் தகுந்த முறையில் நல்வழியில் பயன்படுத்தவேண்டும்.

எம் அனைவருக்கும் மரணம் என்பது விதிவிலக்கல்ல என்பதையுணர்ந்து எமது அன்றாட வாழ்வை நாம் வாழும் போதே இறைவனுக்கும் அடுத்திருப்பவருக்கும் ஏற்புடையதாக அமைத்துக்கொள்ள முயற்சிப்போம். இல்லையேல், இறுதி நாளில் எமது வாழ்வின் மதிப்பீடுகளை இறைவன் கணக்கிடும் போது நாம் விண்ணக மகிமைக்கு உரியவர்களாவது சாத்தியமற்றதாகிவிடும்.

ஏனெனில், இயேசு கல்வாரியில் சிலுவை மீதிருந்து "தந்தையே! உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்" (லூக்23:46) என்று கூறிய வார்த்தை விண்ணகத்தில் ஒரு வாழ்வு உண்டு என்பதை தெளிவுபடுத்துகிறது.

இதன்வழியாக நாமும் இறுதிவரை விண்ணை நோக்கிய வாழ்வை முன்னெடுக்க அழைக்கப்பட்டுள்ளோம்.

இந்த வகையிலேயே கத்தோலிக்க திருச்சபையானது வருடந்தோறும் கார்த்திகை மாதம் 2ஆம் திகதியையும், இம்மாதம் முழுவதையும் இறந்த அனைத்து ஆன்மாக்களையும் நினைவு கூரும் நாள்களாகத் தொன்று தொட்டு அனுஷ்டித்துவருகிறது.

எம்முடன்கூட வாழ்ந்து மடிந்தோரை ஏன் நாம் நினைவுகூர வேண்டும்? இவர்களது மரணம் எமக்குத்தரும் பாடம் என்ன? என்பவற்றைச் சிந்திக்கவும், அச்சிந்தனையின் பெறுபேற்றை

**எஸ்.யேசுதாஸ்**

நடைமுறையில் கைக்கொள்ளவும் இம்மாதத்தைப் பயன்படுத்துவது எமது ஆன்மீகக் கடமையாகும்.

எம்முடன் ஒன்றாக வாழ்ந்தவர்கள் அன்பை, துன்பதுயரங்களை, அனுபவங்களைப் பகிர்ந்தவர்கள் திடீரென எம்மை விட்டுப் பிரிகின்றபோது தாங்க முடியாது துடிக்கின்றோம்; அழுது புலம்புகின்றோம். அவர்களது பணிகள் ஸ்தானம் வெற்றிடமாகும்போது மனித நோக்கில் இறப்பென்பது துயரமான ஒன்றாக அமைந்துவிடுகிறது.

இவ்வாறு எம்மை விட்டுப்பிரிந்த அன்பு நெஞ்சங்களுக்கு நாம் செய்யும் கைம்மாறு தொடர்ந்து அழுது வெந்துகொண்டிருப்பதல்ல. மாறாக அவர்களுக்காகச் செபிப்பது, அவர்களின் நற்பணிகளை, நற்செயல்களைப்

**ஞாயிறு நற்பிரசாதம்**

பின்பற்றி தானதருமங்களில் ஈடுபடுவது, அவர்களது கல்லறைகள், துயிலிடங்களை தரிசிப்பது, ஞாபகார்த்த நிகழ்வுகளைப் பயனுள்ள முறையில் நடத்துவது என்றும் பணிகளேயாகும்.

இறந்த பின்னராவது அவர்கள் பெயரால் எடுக்கப்படும் சடங்குகள், உபாரங்கள் ஆழ்ந்த அர்த்தமுள்ளனவாக இருக்கவேண்டும். நாம் ஒப்புக்கொடுக்கும் பலிகளும் செபங்களும் வேண்டுதல்களும் அவர்களின் ஆன்மா இளைப்பாறுதலை விரைவுபடுத்தும் நல்நோக்கையே கொண்டிருக்க வேண்டும்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Model GI 4 Q2 Sony (14") T.V., Model K.V - 2192 Sony (21") T.V. விற்பனைக்குள்ளது. தொடர்பு: 45, பூங்கா வீதி, குருநகர், யாழ்ப்பாணம். (10147)

Sony கலர் T.V. இரண்டு 14", 21", பனசோனிக் (Panasonic) டெக் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R.S. மகேஸ்வரன், K.K.S. வீதி (பாஸ்கரன் பூங்கா முன்பாக), மல்லாகம். (10143)

வளர்ப்பு மீன்கள், மீன் தொட்டி உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தி, நல்லூர். (10176)

லான்சர் 90 கஸ்ரம் மொடல் ஆஸ்கலர் (H.A.02 மொடல்), கொண்டா 1500W, ஜெனரேற்றர் (ஜப்பான் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தாசன் இணுவில் மத்திய கல்லூரி அருகில். (10206)

கொண்டா 2000 K.V.ஜெனரேட்டா விற்பனைக்கு உண்டு. தொடர்பு: V.ஆனந்தன் 216, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். (10163)

புதிய Sony MHC-VX 777, 4400w (Disc EX.Change/Mini Hi-Fi. Stered Componant System and VCD) Set விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பவி, மானிப்பாய் வீதி, குருசு மதவடி, ஆனைக்கோட்டை. (10222)

## கடை விற்பனைக்கு

மின்சார நிலைய வீதிக்கும், ஸ்ரான்லி வீதிக்கும் இடைப்பட்ட கஸ்தூரியார் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய மாடிக்கடை ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.128, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (10138)

## காணி விற்பனைக்கு

சகல வசதிகளுடன் மாடிவீடு கட்டுவதற்குரிய அத்திவாரத்துடன் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இடம்: மீசாலை மேற்கு, பங்களா வீதி. தொடர்பு: விநாயகர் தொலைத் தொடர்பு நிலையம், மீசாலை கிழக்கு. T.P. 070 212630, 01-730058. (10178)

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் ஒரு பரப்புக் காணி பாதையுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு V.ஆனந்தன், 216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (10164)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் 2 1/2 பரப்புக் காணியுடன் நான்கு அறைகளுடைய சகல விதமான வசதிகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந.சிறிஸ்கந்தராஜா, 695, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (தரகர் தேவையில்லை) (10220)

## கோழிக்குஞ்சு

ஒரு மாதம் நிரம்பிய சிவப்பு நிறப்பேட்டுக் குஞ்சுகள் (100 நாள்களில் முட்டையிடக்கூடியன) விற்பனைக்கு உண்டு. மற்றும் புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு திங்கட் கிழமையும் விநியோகிக்கப்படும். தொடர்பு: (I) மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (II) பொன்னாலை வீதி, விதானைவளவு, மானிப்பாய். (10042)

## ENGLISH/SINHALA

English/Sinhala வகுப்புகள் வழமைபோல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எந்த வயதினரும் தனியாகவோ, சிறுகுழுக்களாகவோ சேர்ந்துகொள்ளலாம். தொடர்பு: T.Sagathevan B.A. Lond, இல.46, பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை. தொலைபேசி: 2223520 (10161)

## காணவில்லை

654,k.m குறியினை உடைய வெள்ளைநிற பசுமாடு ஒன்று 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் காணவில்லை. இதனைக் கண்டவர்கள் S.பரமநாதன், இல.15, அரசடி 3ஆம் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தகவல் தரவும். (10221)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ் என்பன மலிவான விலையில் விற்பனைக்கு உண்டு. இலவசமாக சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.குமரன், 227, பிறவுண் வீதி (நரியன் குன்றுக்கு அருகில்), யாழ்ப்பாணம். (10034)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மிகவும் மலிவுவிலையில் விற்பனைக்கு உண்டு. சுத்தம்செய்தல் இலவசம். அத்துடன் கூடுதல் கொள்வனவிற்கு விலைக்கழிவும் வழங்கப்படும். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக் குளம் முன்பாக), கட்டப்பிராய்.(10035)

புறொயிலர், இறைச்சிக் கோழிகள விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில் சுத்தம்செய்து பெற்றுக கொள்ளலாம். தொடர்பு: இல.85, செம்மணி வீதி, நல்லூர் (கல்விக் கந்தோருக்கு அருகில்). (10158)

Prima, Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தியடி, நல்லூர்.(10045)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மிகவும் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.தளையசிங்கம், இல.09, பலாலி வீதி, முதலாம ஒழுங்கை, யாழ்ப்பாணம். (10215)

## வீடு/காணி தேவை

யாழ்நகருக்கும் கொக்குவிலுக்கும் இடையே காங்கேசன்துறை வீதியில்/அதற்கு 1/2 K.M. தூரத்திற்குள் வீடு/காணி வாடகைக்கு/ குத்தகைக்கு/ விலைக்கு தேவை. ஏனையவை பேசித்தீர்மானிக்கலாம். தரகர்களும் விண்ணப்பிக்கலாம். 09.11.2002 இற்குமுன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல.1692, மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (10149)

## மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1965 புனர்பூசம் ஆசிரியைக்கு தகுந்த வரன் தேவை. ஆசிரியை வவுனியாவில நிரந்தரமாக இருந்து தொழில் செய்கிறார். அரச பணியாற்றும் மணமகனை விரும்பத்தக்கது. தொடர்பு: திருமதி திருச்சிற்றம்பலம், மடத்தடி மேற்கு வீதி, சாவகச்சேரி. (10166)

## தேவை

வெள்ளவத்தை IBC வீதிப் பிள்ளையார் கோயிலுக்கு ஓவியர்கள், சிற்பிகள் மற்றும் சிற்பங்கள், ஓவியங்கள், விலை கொடுத்து ஒழுங்குகள் செய்து வாங்குவதற்குத் தரகர்களும் தேவை. தொடர்பு: ரணசிங்க, 52, ஐ.பி.சி வீதி, கொழும்பு - 6. நவம்பர் 10ஆம் திகதி யாழ்.நாகவிகாரை, நல்லூர் கோயில் முன்பாக நேரில் சந்திக்கலாம். (சி-24633)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, மூல நட்சத்திரம், 31 வயதுடைய, நிரந்தர அரசபணியாற்றும், சைவ போசன மணமகனுக்கு தமையன் தகுந்த மணமகளை எதிர்பார்க்கிறார். தொடர்பு: இ.சிறீதரன், ஊரெழு வடக்கு, சுன்னாகம்.(10200)

## பணிப்பெண் தேவை

வீட்டில் இருந்து இரண்டு வயதுடைய குழந்தையைப் பராமரிப்பதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மாணிக்கப்படும். தொடர்பு: விளம்பர இல.1691, மே/பா. உதயன் யாழ்ப்பாணம். (10189)

## திருமண சேவை

எம்மிடம் தராதரம்மிக்க அமெரிக்கா, கனடா, லண்டன், சுவிஸ், அவுஸ்திரேலியா நாடுகளில் டாக்டர், என்ஜினியர், எக்கவுண்டன், ஆசிரியர் ஆகிய உத்தியோக மணமக்களின் குறிப்புக்கள் உண்டு. தொடர்புகளுக்கு: (1) 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (2) 67A, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு - 13. T.P.: 338162. FAX: 338161 (10066)

1975 உத்திரம், செவ்வாயற்ற, கிரகபாவம் கூடிய, U.K Civil Engineer இற்கு படித்த, அழகான, கௌரவ குடும்பப் பெண் தேவை. தொடர்பு: துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (10201)

## தவறிவிட்டது

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தசாமி இராசயோஜினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 798611836V), விசேட அடையாள அட்டை (இல.091002636) என்பன யாழ்.நவீன சந்தைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 'அன்னை வில்லா' உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் என்ற முகவரியில் அல்லது அடையாள அட்டையிலுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். (10216)

## பதிவு செய்யவும்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கின்ற விவசாயிகளில் பப்பாசி, அன்னாசி, கொடித்தோடை (பஷன் புறூட்ஸ்) போன்ற நல்லின பழச் செய்கையை மேற்கொள்ள விரும்புவோர் இருபாலைச் சந்தியில் உள்ள கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவுக் காரியாலயத்தில் 2002.11.07 ஆம் திகதிக்கு முன்னதாக பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும். (10225)

## பெறுமதிவாய்ந்த முத்திரைகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,நவ.3

யாழ்.பிரதம தபாலகத்துக்கு பெறுமதிவாய்ந்த முத்திரைகள் எடுத்துவரப்பட்டுள்ளன என்றும் - 500 ரூபா மற்றும் 1000 ரூபா பெறுமதி வாய்ந்த முத்திரைகளே இவ்வாறு யாழ்.எடுத்துவரப்பட்டு நேற்றுமுதல் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் யாழ்.பிரதம தபாலதிபர் அறிவித்துள்ளார். (எ-10)

*மீண்டும்*

**செல்வா ஆட்ஸ்**

சைக்கிள் பெயின்ரிங்,
லைனிங்
விளம்பர போட்,
பிளாஸ்ரிக் வீட்டுப்பெயர்,
றபர் சீல் என்பன
செய்து கொடுக்கப்படும்.
230, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
(10228)

MITSUI CEMENT

**மிற்சுயி அன்ட் அற்லஸ் சிமெந்து விற்பனையில் ஈடுபடுவதற்கு பின்வரும் பதவிக்கு ஆற்றல் மிக்க ஒருவர் தேவை**

விண்ணப்பதாரி கணிதம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்தவராகவும், குறைந்த பட்சம் இரும்புப் பொருள்கள் போன்றவற்றின் விற்பனையில் இரண்டு வருட அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

வயது 20-24 இற்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். திறமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்றதான சம்பளம், சொந்தமாக மோட்டார் சைக்கிள் உடையவராக இருப்பதுடன் அதற்கான மாதாந்த உதவிப் பணமும் நிறுவனத்தினால் வழங்கப்படும்.

உறவினரல்லாத இருவரினது பெயர்கள், முகவரிகளுடன் விளம்பர தினத்திலிருந்து பத்து நாள்களுக்குள் விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Advertisement Manager
St. Anthony's Consolidated Ltd.
516, Sri Sangarajan mawatha
Colombo-10
(C/24686)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1913 - 08 - 03 | 2002 - 10 - 04 |



### அமரர் பொன்னையா இராசேந்திரம்

இன்று (03-11-2002) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருந்திய நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டிக்கொள்கிறோம்.

G.P.S றோட்,
கல்வியங்காடு.

குடும்பத்தினர்.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்புகள் கிடைக்கத் தவறியவர்கள் தயவுசெய்து இவ்வழைப்பை ஏற்று நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம். (10227)

**PRIMA**

எங்களால் தயாரிக்கப்படும் பல பொருட்கள் கீழ்குறிப்பிட்ட எங்கள் மூத்த விநியோகஸ்தரிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

| | |
|---|---|
| * Prima Day old Chicks | * பிறிமா கோழிக்குஞ்சுகள் |
| * Prima Poultry Feeds | * பிறிமா கோழித்தீன்கள் |
| * Prima Equipments | * பிறிமா உபகரணங்கள் |
| * Prima Vet.Medicines | * பிறிமாகால்நடை மருந்துகள் |
| * Prima Life & Skinned Chicken | * பிறிமாஇறைச்சிக் கோழிகள் |

Nallur Farm Centre,
(Nallur Video Centre)
19, Murugesar Lane,
Muthiraisanthaiyadi,
Nallur -Jaffna.

நல்லூர் பாம் சென்ரர்,
(நல்லூர் வீடியோ சென்ரர்)
19,முருகேசர் ஒழுங்கை,
முத்திரைச்சந்தையடி,
நல்லூர்-யாழ்ப்பாணம்.

CEYLON GRAIN ELEVATORS LTD.
15, ROCK HOUSE LANE
COLOMBO -15

PRIMA

# சட்டமும், சமயமும் வேறல்ல; கடமையே கண்ணாயிருப்போம்!

## திறப்புவிழா நிகழ்ச்சியில் யாழ்.நீதிவான் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.3

சட்டம் வேறு. சமயம், ஆன்மீகம் என்பன வேறு என்று சிலர் கருது கின்றனர். ஆனால், உண்மை அது வல்ல. மேலைத்தேய நாடுகளில் சட்டம் உரிமையை முன்னெடுக் கிறது. கீழைத்தேய நாடுகளில் கடமை சட்டமாக மதிக்கப்படுகிறது. எனவே, கடமையை நேர்மையுடன் நிறைவேற்று வோம்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். நீதவான் இ.த.விக்னராஜா.

ஸ்ரீ சத்திய சாயி மனித மேம் பாட்டுக் கல்விப் பாடசாலைத் திறப்பு விழா அண்மையில் மானிப்பாயில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

இலங்கைக்கான மத்திய இணைப் பாளர் எம்.வன்னியசேகரம் தலைமை யில் நடைபெற்ற இந்நிகழ்வில் நீதி வான் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு மனிதன் தனது கடமை களை எவ்வித பிரதி பலனும் எதிர் பாராது செய்யும்போதுதான் அவை சமூகத்துக்கு பயன்படுகின்றன. இது போன்றே இந்தப் பாடசாலையும் மனித மேம்பாட்டுப் பண்புகளை வளர்த்துக் கலாசாரத்தையும், பண் பையும் பேணிக்காப்பதுடன் நல்ல தொரு சமூகத்தை உருவாக்க வேண்டும் - என்றார்.

பேராசிரியர் எஸ்.சிவஞானசுந்தரம் (நந்தி) தனதுரையில்:-

இந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் நல்லவர்களா கவும் வல்லவர்களாகவும் திகழ்வார் கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஏனெனில், சாயிபாபாவின் நேரடியான ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தை இவர்கள் கற்கவுள்ளனர்.

இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களுடன் அன்பாகப் பழக வேண்டும். பெற்றோர்கள் பிள்ளை கள் கற்பதை மேற்பார்வை செய்ய வேண்டும் - என்று கேட்டுக்கொண் டார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட முன்னாள் மேலதிக மாகாணக் கல் விப் பணிப்பாளர் சி.சிவராசா, என். கந்தசாமி, சுனந்த தேகொம்பர ஆகி யோரும் உரையாற்றினர்.(எ-10-90)

# சித்துப்பாத்தி மயானம் புல்டோசர் மூலம் துப்புரவு

## ஓரிரு தினங்களில் மீண்டும் பாவனைக்கு!

யாழ்ப்பாணம்,நவ.3

அரியாலை சித்துப்பாத்தி மயா னத்தைப் பொதுமக்களின் பாவனைக் குத் திறந்துவிடும் வகையில் இராணு வத்தினர் நேற்றுமுன்தினம் மயா னப்பகுதியைப் புல்டோசர் கொண்டு துப்புரவு செய்தனர்.

கடந்த ஏழு வருடங்களாக மேற் படி மயானம் பொதுமக்கள் பாவனைக் குத்திறந்து விடப்படாமல் படையின ரால் தடைசெய்யப்பட்டிருந்தது.

அரியாலைப்பகுதி மீள்குடியமர்வு தொடர்பாக யாழ். அரசஅதிபர் இரா ணுவ உயர்மட்டத்தினருடன் நடத்திய கலந்துரையாடலை அடுத்து மிதிவெடி கள் இருக்கலாம் என்ற சந்தேகத் தின் பெயரில் மேற்படி மயானம் படையினரால் புல்டோசர் கொண்டு துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மயானம் ஓரிரு நாள்களில் பொதுமக்கள் பாவனைக்கெனத் திறந்து விடப்படலாம் என தெரிகின்றது.

இதுவரை மேற்படி மயானத்தைப் பயன்படுத்த வேண்டிய கொழும்புத் துறை, அரியாலை, மற்றும் கச்சேரிப் பகுதி மக்கள் பலமைல் தூரம்சென்று செம்மணி இந்து மயானத்தைப் பயன்படுத்தி வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-86)

# 2000ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த அரியாலைக் குடும்பங்களுக்கும் மீள்குடியமர்வு நிதி கிடைக்கும்

யாழ்ப்பாணம்,நவ.3

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த சூழ்நிலைகளை அடுத்து, இடம் பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்ந் துள்ள அரியாலைப் பகுதிக்குடும் பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப் பனவாக ரூபா 65ஆயிரம் வழங்கப் படவுள்ளது என நல்லூர் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலர் பிரி வைச் சேர்ந்த அரியாலைப் பகுதி சகல கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் வசிக்கும் குடும்பங்களும், நாயன்மார்கட்டு கிராம உத்தியோ கத்தர் பிரிவுப் பகுதி மக்களுக்குமே இவ்வாறு கொடுப்பனவுகளைப் பெற வுள்ளனர் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

ஏ-9 தரைவழிப்பாதை திறக்கப் பட்டதையடுத்து மேற்படி பகுதிகளில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கே முதலில் இக்கொடுப்பனவுகள் வழங் கப்படும் என்றும் -

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தசூழ்நிலையையடுத்து இடம் பெயர்ந்தவர்களுக்கு பின்னர் கட்டம் கட்டமாக இந்தக் கொடுப்பனவு வழங் கப்படும் என்றும் - மேலும் தெரிவிக் கப்பட்டது. (எ-180)

## கடமை செய்யவிடாது

# கிராம அலுவலரைத் தடுத்தவருக்கு ஆறுமாதகால சிறைத்தண்டனை

கிராம அலுவலரின் அலுவலகத் திற்குச் சென்று அவரைக் கடமை யைச் செய்யவிடாது தடுத்து, கல கம் விளைவித்தவருக்கு இரண்டு வருடம் ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத கடூழியச் சிறைத்தண்டனை விதிக் கப்பட்ட துடன் ஆயிரம் ரூபா தர்மப் பணத்தை திருநெல்வேலியிலுள்ள சைவச் சிறுவர் இல்லத்திற்கு வழங் கும்படியும் யாழ்.நீதிமன்று கட்டளை பிறப் பித்தள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பிரி வைச் சேர்ந்த திருநெல்வேலி பாற் பண்ணை பகுதியில் கடமையாற்றும் கிராம அலுவலரை கடமையாற்ற விடாது தடுத்ததாகக் கூறி திருநெல் வேலி பாரதி புரத்தைச் சேர்ந்த கந தன் மகேந்திரராஜா என்பவரை கோப் பாய் பொலீஸார் கடந்த புதன்கிழமை யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்தனர். குறிப்பிட்ட நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதிவான இ.த.விக்னராஜா இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (எ-86-10)

# கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு!

## கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை தேவை

யாழ்ப்பாணம்,நவ.3

யாழ்.குடாநாட்டில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை பெருமளவில் அதிகரித்துள்ளது. இதனால், நாய்க் கடிக்கு உள்ளாகி சிகிச்சை பெறுவோ ரின் எண்ணிக்கை கடந்த சில காலங் களாக அதிகரித்துவருவதாக யாழ். போதனா மருத்துவ மனை வட்டாரங் கள் தெரிவித்தன.

நாய்க்கடிக்கான ஏ.ஆர்.வி.மருந்து களைப் பெறுவதில் தொடர்ந்தும் பல சிக்கல்கள் உள்ள நிலையில் நாய்க்கடிக்கு இலக்காவோரின் எண் ணிக்கை அதிகரித்துவருவது கவ லைக்குரிய விடயம் என்று மருத்துவ மனை டாக்டர் ஒருவர் தெரிவித்தார்.

நாய்க்கடிக்கு உள்ளாகும் நோயா ளர் எண்ணிக்கை அதிகரிப்பால் மருத்துவமனையில் நெருக்கடிகள் ஏற்படுவதாகவும் அவர் கூறினார். நாய்க் கடிக்கு இலக்கான ஒருவருக்கு சிகிச் சையளிக்கும் நேரத்தில் சாதாரண நோயாளிகள் நால் வருக்கு சிகிச்சைய ளிக்கமுடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

நாய்களை வளர்போர் அவற்றை தகுந்த முறையில் பராமரித்து வளர்க் காததும் -

நாய்கள் வீதிகளிலும் பொது இடங்களிலும் கட்டுப்பாடின்றித் திரி வதை நிறுத்தப் போதுமான நடவ டிக்கை எடுக்காததுமே இந்த நிலை ஏற்படக் காரணம் என்றும் கூறப்படு கின்றது.

மாநகரசபை, பிரதேச சபைகள் மற்றும் பொது சுகாதாரப் பரிசோத கர்கள் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் எடுத்துச் செயற்படவேண் டும் என்றும் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (ம)

## குருநகர் - றெக்கிளமேசன் பகுதி

# பொதுக்கிணறுகள் பலவும் சேறு மண்டிய நிலையில்!

குருநகர் றெக்கிளமேசன் பகுதி யிலுள்ள பொதுக்கிணறுகள் புன ரமைக்கப்படாமல் சேறுமண்டிக் காணப் படுகின்றன.

மேற்படி பகுதியில் ஆறு பொதுக் கிணறுகள் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டிருந் தன. எனினும் தற்போது நான்கு கிணறு களே பாவிக்கக்கூடிய நிலையில் உள்ளன. இரண்டு கிணறுகள் தனிப பட்டவர்களால் மூடப்பட்டுவிட்டன.

ஆனால், எஞ்சியுள்ள நான்கு கிணறுகளில் மூன்று பாசி பிடித்து பாவிக்கமுடியாத நிலையிலுள்ளது. ஒரு கிணறு பொதுமக்களால் பயன் படுத்தப்பட்டு வருகின்றபோதிலும் அதற்குச் சுற்றுமதில் இல்லை.

பாழடைந்த நிலையிலுள்ள மேற் படி பொதுக்கிணறுகளை துப்புரவு செய்யுமாறு குருநகரிலுள்ள பொது அமைப்புகள் யாழ். மாநகர சபைக்கு மகஜர் சமர்ப்பித்துள்ள நிலையிலும் இதுவரை உரிய நடவடிக்கை எதுவும எடுக்கப்படவில்லை என இப்பகுதி பொது அமைப்புகள் தெரிவித்தன.

யுத்தநிலைமை காரணமாக பல வருடங்களாக மக்கள் பாவனைக்கு இல்லாமலிருந்த மேற்படி கிணறுகளில் அழுக்கு நீர் மற்றும் சேறுமண்டி துர் நாற்றம் வீசுவதுடன், நுளம்பு பெருகி பலவித நோய்கள் உருவாகும் சூழ் நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே, மாநகரசபையின் சுகா தாரப் பகுதியினர் இது தொடர்பாக விரைவில் உரிய நடவடிக்கை மேற் கொள்ள வேண்டுமென குருநகர் மக் கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-51)

### யாழ்.ஆஸ்பத்திரிக்கு பிளாஸ்ரிக் கதிரைகள் அன்பளிப்பு

தென்னகத்தில் இருந்து முதற் தடவையாக யாழ் குடாநாட்டில் தமது விற்பனை முகவர் நிலையங்களை விஸ்தரித்துள்ள 'தம்ரோ' தளபாட உற்பத்தி விற்பனை நிறுவனம், யாழ் போதனா வைத்தியசாலைக்கு 100 பிளாஸ்ரிக் கதிரைகளை அன் பளிப்பாக வழங்கியுள்ளது. (ம-15)

# தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு இம்முறை 161பேர் தெரிவாகினர்

யாழ்ப்பாணம்,நவ.3

நீண்ட கால இடைவெளிக்குப் பின் னர் வடக்கு - கிழக்கு மாகாணத் தைச் சேர்ந்தவர்களுக்கான தாதியர் பயிற்சி வகுப்புகள் யாழ்.தாதியர் பயிற் சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

மேற்படி பயிற்சிக் கல்லூரியில் தாதிய மாணவர்களை அனுமதிப்ப தற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை முடிவுகளில் இருந்து வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து 161 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் யாழ்.மாவட்டத்திலி ருந்து 98 பேரும் கிளிநொச்சியிலிருந்து 37 பேரும் வவுனியாவிலிருந்து 10 பேரும் மன்னாரிலிருந்து 14 பேரும் திருகோணமலையிலிருந்து 2 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின பெயர் விவரம் மாவட்ட ரீதியாக வரு மாறு:-

### யாழ்ப்பாணம்

எஸ்.கனகரத்தினம் (உடுவில்), த.தங்கராசா (சண்டிலிப்பாய்), ஆர்.கிரு பாஜினி (வட்டுக்கோட்டை), யோ.துஸ் யந்தினி (யாழ்ப்பாணம்), மா.மைதிலி (பருத்தித்துறை), ப.அனோஜா (யாழ்ப் பாணம்), செ.சுதர்சினி (யாழ்ப்பா ணம்), வை.கமலினி (சாவகச்சேரி), ஜெ.தேன்மொழி (கந்தர்மடம்), ச.சிவ காமி (வட்டு. வடக்கு).

பயிரேமினா (யாழ்ப்பாணம்), சி.சிவ ரூபி (கொடிகாமம்), ஆர்.ரூபா (இணு வில்), யோ.சுகந்தி (கொழும்புத்துறை), வே.இராஜதகௌரி (காரைநகர்), கு. சகுந்தலா (சுன்னாகம்), து.சிவநந் தினி (மிருசுவில்), வி.தமிழ்ச்செல்வி (சுன்னாகம்), க.அனிதா (பருத்தித் துறை), து.தனுஜா (சண்டிலிப்பாய்).

ரி.பி.எம்.குயினி (மார்ட்டின் வீதி,யாழ்.), ச.அநோஜா (கரவெட்டி), பெ.கிருஷ்ணவேணி (யாழ்ப்பாணம்), க.சுவர்ணா (பண்டத்தரிப்பு), ஆர்.மை திலி (சுன்னாகம்), வி.ஸ்ரீகரனி (அள வெட்டி), க.தயானி (வட்டுக்கோட்டை), ச.கிரிசாந்தி (சங்கானை), த.கிரு ஷாந்தி (மானிப்பாய்), ச.கோகுல்வாணி (உடுவில்).

த.விஜிதா (பொலிகண்டி), சி.சுகந் தினி (சுழிபுரம்), அ.அனுஜா (இமையா ணன் கிழக்கு), மு.தட்சாயனி (இள வாலை), மா.நளினி (ஏழாலை), இ.வரத கேணி (கந்தர்மடம்), பொ.சுவர்ணமுகி (ஆனைக்கோட்டை வீதி,யாழ்.), மு. மதனா (புத்தூர்), ப.நவசிறி (யாழ்ப் பாணம்), க.சுதர்சினி (பருத்தித்துறை).

த.சுமித்திராதேவி (சுன்னாகம்), தி.அருளினி (நல்லூர் வடக்கு), க.அரு ளினி (உடுவில் கிழக்கு), மு.வை தேகி (கம்பர்மலை), பா.கிருஷாந்தி (இராமநாதன் வீதி, யாழ்.), பா.திஷாந தினி (மார்ட்டின் றோட்,யாழ்.), இ. சுகந்தி (மானிப்பாய்), க.துளக்ஷி (நீர வேலி), யோ.சுகந்தி (சுண்டுக்குளி), சி.சிவரஞ்ஜினி (மல்லாகம்).

க.தயானி (வட்டுக்கோட்டை), சி.மடோனா (நெல்லியடி), யோ.சோ பியா (ஆனைக்கோட்டை), சி.சிஜிதா (கோண்டாவில்), ப.நவசக்தி (கே.கே. எஸ்.வீதி), செ.அருட்செல்வி (சுன்னா கம் மேற்கு), மா.சிறீசுகந்தினி (தெல் லிப்பழை), கா.காயத்திரி (புங்கங்கு ளம் வீதி,யாழ்.), சே.உமா (கொக்கு வில்), தி.உதயப்பிரியா (யாழ்ப்பாணம்).

வே.சர்மிளா (தொண்டமானாறு), நா.நயனா(கரணவாய் தெற்கு), ந.பிரதீபா (கொடிகாமம்), சி.யாழினி (மானிப்பாய்), ம.சுமணா (கரவெட்டி), ச.சாருமதி (புலோலி), ச.அனுமீரா (சுன்னாகம்), த.துஷி (மீசாலை), த.ஜெகினி (சுன்னாகம்), யோ.பிரதீபா (கோப்பாய்).

பா.தர்சினி (ஊர்காவற்றுறை), பா.தர்சினி (சங்கானை), செ.சுதர்சினி (வண்ணார்பண்ணை), சூ.மைதிலி (பண் டத்தரிப்பு), இ.சரிதா (சித்தன்கேணி), செ.கிருஷ்ணராணி (புலோலி), கி.அனு ஷியா (மீசாலை), சி.ஜேசுதா (யாழ்ப் பாணம்), யோ.ஜெஸ்மினி (யாழ்ப் பாணம்), து.கிருஷ்ணகௌரி (மாத கல்).

க.சுசீலா (கரவெட்டி), மு.பிரதீபா (சுன்னாகம்), சி.சிந்துஜா (இமையா ணன் கிழக்கு), பா.தமிழினி (சுண்டுக் குளி), நா.அபிராமி (அரியாலை), பா.ஜெனனி (கண்டி வீதி,யாழ்.), க.பத்மலோஜினி (கண்டி வீதி,யாழ்.), செ.சிவதயானி (வட்டுக்கோட்டை), செ. செல்வராணி (சுன்னாகம்), ம.அமரா வதி (யாழ்ப்பாணம்).

க.கயலினி (கொக்குவில்), த.ஜெய ரூபா (நீர்வேலி), த.அறிவரசி (சுன்னா கம்), செ.தேவதர்சினி (உடுவில்), க.தீபா (சாவகச்சேரி), சி.சித்திரா (உடு வில்), இ.கல்யாணி (இணுவில்), அ.சாந்தரூபி (கோண்டாவில்).

### மன்னார்

த.மைத்ராஜா (உப்புக்குளம்), ஆ.ரீனாகல்யாணி பீரிஸ் (வங்காலை மன்னார்), ஜே.மேரி பிரட்றிஸ் குறோஸ் (வங்காலை மன்னார்), மனுவல் லவன்யா கொன்சி (பேசாலை), ம.மருத வாணி (ஆஸ்பத்திரி வீதி, மன்னார்), செபஸ்தியான் அருணா குறோஸ் (வங்காலை).

சூ.சித்ரா டெலந்தினி (தோட்டா வளை), கனைகோரதி மார்க் (வங் காலை), அல்போன்ஸ் ஜெனிபீரிஸ் (பேசாலை), சந்திகேயு அன்மிதா பெரேரா (தாழ்வுப்பாடு), பிரான்சிஸ் பர்னாந்துகலா எலிசபத் (மன்னார்), அன்கில்ஸ் குணரத்தினம் (சின்னக் கடை), எல்மோசியம்ல் கதறின் பீரிஸ் (பேசாலை), கே.சிவப்பிரியா (உப்புக் குளம்).

### வவுனியா

ச.ஷஜிகா (வவுனியா), எட்வேட் கிறிஸ்ரின் றியாதுஜா (வேப்பக் குளம்), சி.சிவதர்சினி (பட்டானிச்சி புளியங்குளம்), சு.அமுதப்பிரியா (பூந் தோட்டம்), செ.அலைமகள் (உக் கிளாங்குளம்), ச.கார்த்திகா (இறம் பைக்குளம்), செ.கேமலதா (உக்கி ளாங்குளம்), நா.அன்புமதி (சாந் சோலை), சி.சிவரூபரஜனி (கனகராஜன் குளம்), த.சங்கீதா (இலுப்பைக்குளம்).

### கிளிநொச்சி/முல்லைத்தீவு

சி.பத்மப்பிரியா (புதுக்குடியிருப்பு), பூ.தனுஜா (புதுக்குடியிருப்பு), பொ. தயானி (புதுக்குடியிருப்பு), அ.விஜிதா (ஒட்டிசுட்டான்), சு.பிரபாலினி (புதுக் குடியிருப்பு), க.சிவகௌரி (முள்ளி யவளை), இ.சுகந்தி (புதுக்குடியிருப்பு), இ.அனுஜா (புதுக்குடியிருப்பு), வி. டலினி(கோவில் குடியிருப்பு), கே.சங் கீதா (புதுக்குடியிருப்பு).

து.கலையரசி (உடையார்கட்டு), எஸ்.அகிலா (வட்டக்கச்சி), கு.மோகன ஸ்ரீ (பரந்தன்), ஆ.உதயச்செல்வி (வட டக்கச்சி), சி.பவானி (வட்டக்கச்சி), கோ.துஷ்யந்தி (கிளிநொச்சி), தே.மொறின் ஜென்ரினா (ஜெயந்தி நகர்), ப.தேவகௌதம் (கிளிநொச்சி), இ.தவமோகன் (கிளிநொச்சி), கு.தவ ரூபன் (கன்னாரிக்குளம்).

ச.றஞ்சிதபவன் (கிளிநொச்சி), த.சுகந்தராஜ் (முல்லைத்தீவு), த.இரவீந திரன் (துணுக்காய்), வே.ஜெனார்த் தன் (துணுக்காய்), த.சுதர்சன் (புதுக் குடியிருப்பு), பா.யசோதரன் (புதுக் குடியிருப்பு), சு.புஸ்பாகரன் (புதுக் குடியிருப்பு), சோ.நளாயினி (கிளி நொச்சி), இ.சுகந்தி (மன்னர் குடி யிருப்பு), ந.மனோரஜினி (ஒட்டிசுட் டான்).

க.சங்கீதா (புதுக்குடியிருப்பு), சி.சுபோதினி (புத்தூர்), ம.மேரிபூமா (மன்னர் குடியிருப்பு), வி.விஜேயநந் தினி (பரந்தன்), தே.மரின் புனிற்றினா (முல்லைத்தீவு), க.கதீர்செல்வி (திரு வையாறு), வி.டாலினி (கோவில் குடியிருப்பு).

### திருகோணமலை

க.டினோஜி (பாலையூற்று), ந. சுமிதா (உப்புவெளி). (எ-5-10-15-12)

# சிற்றூழியர் பற்றாக்குறை

வடமராட்சி,நவ.3

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிற்றூழியர்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

சிற்றூழியர்களுக்கான மொத்த ஆளணியில் தற்போது அரைவாசிப் பேரே கடமையாற்றி வருகின்றனர்.

இதன் காரணமாக வைத்திய சாலைப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. (ம-173)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



சத்தியசீலன்-கல்பனா

தம்பதிகளின்

செல்வப் புதல்வி

## வியூட்டிகா

தனது முதலாவது பிறந்தநாளை இன்று(3.11.2002) ஞாயிற்றுக்கிழமை சங்கானையில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். வியூட்டிக் குட்டியை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அப்பம்மா, அம்மப்பா அம்மம்மா மாமா, இந்தியாவில் உள்ள பெரியப்பா, பெரியம்மா, ஜேர்மனி மாமா, பெரிய அத்தை, மச்சி, மச்சான்மார், இத்தாலி சித்தப்பா, அத்தை, சித்தா, பாட்டி, அக்காமார், அண்ணைமார், மச்சாள்மார், மச்சிமார், மாமாமார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மாமார் அனைவரும் நந்தாவில் அம்மன் அருள் பெற்று சகல சௌபாக்கியங்களுடனும் வாழ வாழ்த்துகின்றனர்.

சங்கானை. (10248) - பெற்றோர்.

# செயலமர்வு இறுதிநாள் நிகழ்வுகள்

தென்மராட்சி,நவ.3

தென்மராட்சி பாடசாலைகளின் பாடசாலை மட்டக் கல்வி அபிவிருத்தி செயற்திட்ட செயலமர்வின் நிறைவு நாள் நிகழ்வுகளும், காட்சிப்படுத்தலும் இன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

திருகோணமலையில் இருந்து வருகை தந்துள்ள ஜி.ரி.இசட் நிறுவன பிரதம செயற்திட்ட அதிகாரிகளும் செயலமர்வில் கலந்துகொள்வர். சித்திர உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.கைலாசநாதனுடன் சித்திர ஆசிரியர் குழுவினரும் இணைந்து சிறப்பு செயலமர்வு ஒன்றினையும் நிகழ்த்தவுள்ளனர்.

அனைத்து ஆரம்பக் கல்வி ஆசிரியர்களையும் நிறைவுநாள் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் தஹரீஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.(ம)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு நீர் இறைக்கும் இயந்திரம் விரைவில் கிடைக்கும்!

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி சபையினர் சாவகச்சேரி அரசினர் வைத்திய சாலைக்கு ரூபா 40 ஆயிரம் பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கவுள்ளனர்.

# தீவகத்தில் மீன்பிடிக்க புதிய கட்டுப்பாடுகள்

## கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,நவ.3

தீவகத்தில் மீன்பிடிக்கப் புதிய கட்டுப்பாடுகளைக் கடற்படையினர் நடைமுறைப்படுத்துவதாக வேலணை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

கடற்படையினர் வழங்கும் அனுமதிச் சீட்டையுடனேயே(பாஸ்) மீன்பிடிக்கச் செல்ல முடியும். தங்கள் முகாம் ஊடாகவே கடலுக்குச் செல்ல வேண்டும் என்பன போன்ற புதிய விதிகளை கடற்படையினர் நடைமுறைப் படுத்துவதாகச் சங்கம் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது. (ஐ-3)

## பிற்போடப்பட்டது

விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தால் வறிய மாணவர் கல்வி வளர்ச்சிக்கான நிதியுதவிக்காக நாளை (04.11.2002) திங்கட்கிழமை தீபாவளி தினத்தில் நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் 03.12.2002 செவ்வாய்க்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

தலைவர்,
விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(10243)


## BRIGHT BOOK CENTRE இன் புத்தகக் கண்காட்சியும், விற்பனையும்

இடம் : இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு.
காலம் : 05.11.2002 முதல் 06.11.2002 வரை.

விற்பனைக் கழிவாக
10% முதல் 50% வரை வழங்கப்படும்.

கண்காட்சியில் மாணவர்களுடன் பங்குபற்றும் பாடசாலைகளின் நூல்நிலையத்துக்கு அன்பளிப்பாக 1000 ரூபா பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்படும்.

*வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் எமது நடமாடும் புத்தகக் கண்காட்சியையும் விற்பனையையும் நடத்த விரும்பும் பாடசாலைகள் தொடர்புகொள்ளலாம்.*

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**

P.O.BOX 162, COLOMBO. (10242)


# பரதநாட்டிய அரங்கேற்றம்



இன்று (03.11.2002) ஞாயிற்றுக்கிழமை

காலை 9.00 மணி

திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன்

அவர்களின் தங்கையும் மாணவியுமான

## செல்வி ஸ்ரீரதி சந்திரராசா

*இடம்:* யாழ்.வீரசிங்கம் மண்டபம்

*தலைவர்:* மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் M.A. அவர்கள்

*பிரதம விருந்தினர்:* பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்கள் (தலைவர், நடனத்துறை)

*சிறப்பு விருந்தினர்:* பேராசிரியர் வி.சிவசாமி அவர்கள்

## நிகழ்ச்சி நிரல்

★ மங்கள விளக்கேற்றல்:
திருமதி கிருசாந்தி ரவீந்திரா *(சிரேஷ்ட விரிவுரையாளர், நடனத்துறை)*

ஆசியுரை: சிவஸ்ரீ சுந்தரராஜக்குருக்கள் *(வழக்கம்பரை)*
திருமதி சாந்தினி சிவனேசன்
*(நடன விரிவுரையாளர், ஆசிரியகலாசாலை, கோப்பாய்)*

நட்டுவாங்கம்: நாட்டியக் கலாவித்தகர், நுண்கலைமாணி
திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன் அவர்கள்

பாட்டு: சங்கீதபூஷணம், கலாபூஷணம் சு.கணபதிப்பிள்ளை அவர்கள்
சங்கீத கலாவித்தகர், நுண்கலைமாணி
திருமதி பங்கயச்செல்வி முகுந்தன் அவர்கள்

மிருதங்கம்: லயஞானவாரிதி சங்கீதரத்தினம் சி.மகேந்திரன் அவர்கள்
*(விரிவுரையாளர், நடனத்துறை)*

வயலின்: இசைஞானபூபதி அ.ஜெயராமன் அவர்கள்

புல்லாங்குழல்: இசைக்கலைமாணி செல்வன் ஆர்.வசந்தன் அவர்கள்

*ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(சி-24605) திரு.திருமதி சந்திரராசா குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது துர்க்கா என்ரபிரைசஸ் உரிமையாளரும் அண்ணா தொழிலக உரிமையாளரின் சகோதரனும் ஆகிய

## பொன்னையா விவேகானந்தன்

அவர்கள் 01.11.2002 வெள்ளிக்கிழமை அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*துர்க்கா என்ரபிறைசஸ், இணுவில்.*

→ ஊதுபத்திப் பகுதி ஊழியர்கள்.

(C/24689)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவயோகநாயகி நாகேந்திரம்

எழுதுமட்டுவாழ தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகநாயகி நாகேந்திரம் 30.10.2002 புதன்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சின்னத்தம்பி நாகேந்திரத்தின் அன்பு மனைவியும் யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் அண்ணாத்துரை, பிரதீபன் (நியூஸிலாந்து), சுகன்யா (நோர்வே), சோபனா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நவரத்தினராசா (கிராம சேவையாளர், எழுதுமட்டுவாழ் தெற்கு), பாலசுந்தரநாயகி (கண்டாவளை), ஞானசுந்தரராசா (கனடா), அகிலாண்டநாயகி (டென்மார்க்), சாந்தநாயகி, காலஞ்சென்ற இராசநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகராசா (சட்டத்தரணி), நாகேஸ்வரி, நாகபூஷணி, நாகராணி, நாகதேவி, நாகலிங்கம், நாகேஸ்வரன், நாகரஞ்சன், நாகபாலன் மற்றும் இந்திராணி (ஆசிரியை), குமாரசாமி, சுகேசினி (கனடா), வைகுந்தவாசன் (டென்மார்க்), சிவரத்தினம், மோகனகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் வனஜா, இந்திரன் (நோர்வே), செல்வகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் மதுமிதா, தர்மிகா, அபிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3.11.2002) ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் மேற்கில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பேர்பா அ.நல்லதம்பி (TRRO)*
*'புனிதம்', மானிப்பாய் வீதி,*
*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.*

(41244)

தகவல்:
கு.சிவரத்தினம்
(மைத்துனர்).


யாழ்நகரில்! கடற்கரையோரம்! இயற்கைச்சூழலில்!

## இன்று குதூகல ஆரம்பம்.

★ உல்லாசப் பயணிகள் தங்குமிடம். ★ எழில்மிகு காட்சிகளைக் கண்டுகளிக்க போக்குவரத்து வசதி.
★ பொழுதினை இன்பமாய்க் களிக்க களிகொள் நிகழ்ச்சிகள்.
★ சுவைதரு காலை, மதிய, மாலை உணவுகள்
இவையாவையும் ஒரே இடத்தில்...!

இலங்கை உல்லாசப் பயணச்சபையின் அங்கீகாரம் பெற்ற

## யாழ் பீச் இன் YARL BEACH INN

(Tourism - Travels - Entertainment & Catering)
Reg. No. : 14186

உரிமையாளர்
திரு.எஸ்.சிலுவைராசா

இல.8, பழையபூங்கா வீதி, யாழ்ப்பாணம், ஸ்ரீலங்கா.

(C-24603)

# சமாதானத்தை நிலைநாட்டும் பொறுப்பு முப்படைகளிடமும்!

## பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

நாட்டில் சமாதானத்தை நிலை நாட்டும் பாரியபொறுப்பு முப்படையினரிடமும் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் உள்ள கடற்படை முகாமில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றி உரைநிகழ்த்து கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பொருளாதாரத்தினை வளர்ப்பதிலும் முப்படையினரும் பங்குகொள்ளமுடியும்.

நாற்புறமும் கடலால் சூழப்பட்ட இலங்கை சிறந்த பொருளாதார வலயத்தினைக் கொண்டுள்ளது. இத்தகைய பொருளாதார வலயங்கள் மூலம் எதிர்காலத்தில் பெரும் அளவு வருமானத்தினை பெற்றுக் கொள்வது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இது விடயத்தில் கடற்படையினரின் பங்கும் அளப்பரியது என அமைச்சர் திலக் மாரப்பன குறிப்பிட்டிருந்தார். (ம-12)

### சிறுவன் பெற்றோரிடம் ஒப்படைப்பு

விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைய முன்வந்த வயது குறைந்த சிறுவன் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டான். யாழ்ப்பாணம் கர்மேல் வீதியைச் சேர்ந்த பொனிஸ் கனிபல் றொசான் என்ற சிறுவன் இயக்கத்தில் இணைய வந்ததாகவும் - அவர் வயது குறைந்தவராக இருந்ததால் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் - விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். (ம-3)

திறந்த பல்கலைக்கழக

# சட்டமாணி கற்கைக்கு யாழில்இருந்து 19பேர்தெரிவு

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட சட்டமாணி (எல்.எல்.பி) கற்கைநெறிக்கான அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 19பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட இந்த அனுமதிப் பரீட்சையில் 8ஆயிரம்பேர் தோற்றியிருந்தனர் என்றும் அவர்களில் 500பேர் கற்கைநெறிகளுக்கென தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் யாழ்பிராந்திய இயக்குநர் எஸ்ஞானேந்திரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 19 பேர்களின் பெயர் விவரம் வருமாறு:-

என்.இராசநாயகம், திருமதி. எஸ்.கெனத், எஸ்.லக்ஷிதன், எஸ்.மல்லிகாதேவி, வி.நேசரத்தினம், வி.பரமேழகபிள்ளை, ஏ.இராசேந்திரம், ஆர்.இரத்தினசிங்கம், ஆர்.ஷகிதா, ரி.சறோஜா. எஸ்.சத்தியசீலன், கே.சயந்தநாதன், எம்பி.சிவலிங்கம், எஸ்.சிவமலர், என்.சிவசுப்பிரமணியம், ரி.ஸ்ரீகாந்தன், கே.தாட்சாயினி, என்.வனிதா, எஸ்.சுகேந்திரன்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு யாழ்பிராந்திய அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# மெய்கண்ட தேவர் குருபூசை

யாழ்ப்பாணம்,நவ.3

அகில இலங்கை சைவ சித்தாந்த பண்டிதர் சங்க ஏற்பாட்டில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம், நீராவியடியில் அமைந்துள்ள சைவ பரிபாலன சபை மண்டபத்தில் மெய்கண்ட தேவர் குருபூசை தினவிழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் சைவ சித்தாந்த சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும். அனைத்து சைவ சித்தாந்த பண்டிதர்களையும், சைவ சமய அபிமானிகளையும் கலந்துகொள்ளுமாறு சைவ சித்தாந்த பண்டிதர் சங்கம் கேட்டுள்ளது. (ம)

# வெளிநாடுகள் வழங்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றோஸ் கார்டின் ரிசோர்ட்டில் நடைபெறும் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அதன்படி, இந்த விசேட செயலணி தற்போது சமாதானப் பேச்சுக்களை நடத்தும் குழுவின் உபகுழுவாக இனிமேல் செயற்படும்.

வடக்கு - கிழக்கின் புனரமைப்பு, புனர்நிர்மாணப் பணிகளுக்கு இந்த உபகுழுவே பொறுப்பாக இருக்கும்.

எதிர்வரும் 25ஆம் திகதி இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் ஒஸ்லோ நகரில் நடைபெறவிருக்கின்றது. இந்தக் கூட்டத்தில் இலங்கை அரசுத் தரப்புக் குழு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பங்குபற்றுகின்றது. இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனேகமாக புலிகளின் தத்துவாசிரியரும் தற்போது சமாதானப் பேச்சுக்களுக்கு புலிகள் தரப்புக்கு தலைமை வகிப்பவருமான அன்ரன் பாலசிங்கம் புலிகளின் பிரதிநிதியாக இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு புனரமைப்புக்குப் பொறுப்பாக அமையவிருக்கும் உபகுழு (முன்னர் விசேட கூட்டுச் செயலணி என அழைக்கப்பட்டது) குறித்து உதவும் நாடுகளின் கூட்டத்தில் உத்தியோகபூர்வமாக விளக்கப்படும். அந்த உப குழுவினால் மேற்கொள்ளப்படவிருக்கும் புனரமைப்புப் பணிகளுக்கு நிதிஉதவி வழங்குமாறு இக்கூட்டத்தில் உதவும் நாடுகளை அரசுத் தரப்பும், புலிகள் தரப்பும் சேர்ந்து கூட்டாகக் கோரும் எனவும் தெரிகிறது.

இவ்வாறு பெறப்படும் நிதி நேரடியாக இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்படமாட்டாது. உதவும் நாடுகளின் கூட்டத்தில் இதற்கென தெரிவுசெய்யப்படும் ஒரு நாட்டுக்கு அனைத்துத் தரப்பிலிருந்தும - புனரமைப்புப் பணிக்கென - கிடைக்கும் நிதி அனுப்பப்படும்.

புனரமைப்புக்குப் பொறுப்பான உபகுழு அடையாளம் கண்டு அங்கீகரிக்கும் திட்டங்களுக்கு நேரடியாக அந்த நாட்டிலிருந்து நிதி அனுப்பி வைக்கப்படும்.

- இப்படி நேற்று நடைபெற்ற பேச்சுக்களில் தீர்மானிக்கப்பட்டதாக நம்பகமாக அறியவந்தது.

புனரமைப்புக்குப் பொறுப்பான உபகுழுவை அமைத்தல், அதற்கான நடைமுறைகளை வகுத்தல் ஆகிய விடயங்களை நோர்வேத் தரப்பினர் நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) இரவு இலங்கை அரசுத் தரப்பினருடன் இணைந்து மேற்கொண்டனர்.

பின்னர் இதே பணியை நேற்றுக் காலை 7.30 மணிமுதல் சுமார் இரண்டு மணிநேரம் புலிகளின் பிரதிநிதிகளுடன் இணைந்து அவர்கள் மேற்கொண்டனர். இதனால் நேற்றுக் காலை - மூன்றாம் நாள் - சமாதானப் பேச்சுக்கள் ஒரு மணிநேரம் தாமதமாகவே - காலை 10 மணிக்கு - ஆரம்பமாகின.

புனரமைப்புக்குப் பொறுப்பாக அமையவிருக்கும் உபகுழு குறித்து, சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றும் இலங்கை அரசுத் தரப்பின் தலைவரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:-

"இரண்டு தரப்பும் சேர்ந்து முடிவுகளை எடுக்கும். முடிவுகளை எடுத்த பின்னர் அதற்கான நிதி வழங்கப்படும். ஆனால், எந்த ஒரு திட்டத்துக்கான நிதியும் இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே செலவிடப்படும். அதற்கான வழிமுறைகளை நாம் வகுத்துள்ளோம். எவரும் விமர்சிக்க முடியாத நடைமுறையாக அது இருக்கும்.

"அடிப்படையில், இரு தரப்பினரதும் அபிலாஷைகளை நிறைவு செய்யும் வழிமுறையாக அது அமைந்துள்ளது. அத்துடன் உதவி வழங்கும் நாடுகள் சமூகத்தின் நம்பிக்கையைப் பெறுவதாகவும், நாட்டின் சட்டங்களுக்கு முழுவதும் அமைவானதாகவும் அது இருக்கிறது" - என்றார் ஜி.எல்.பீரிஸ்.

வடக்கு - கிழக்கில் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய பாரிய திட்டங்கள் தொடர்பான விடயங்களை அடையாளம் கண்டு ஓர் அறிக்கை தயாரித்து உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் அதைச் சமர்ப்பிக்க அரசு - புலிகள் தரப்பினர் இணங்கியுள்ளனர்.

அத்தகைய திட்டங்களை அடையாளம் கண்டு, ஆயத்தம் வகுக்கும் முயற்சி நேற்று மாலை நடைபெறவிருந்த பேச்சிலும் இன்று காலை இடம்பெறும் பேச்சுக்களிலும் மேற்கொள்ளப்படவிருந்ததாக அறியவந்தது. (ம)

வடக்கு - கிழக்கு மாகாணமட்ட

# பாடசாலை நூலக தினம் இம்முறை மன்னாரில்!

திருகோணமலை,நவ.3

வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்திலான சர்வதேச பாடசாலை நூலக தினம் இம்முறை மன்னாரில் கொண்டாடப்படவுள்ளது.

மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ள விழாவில் வடக்கு - கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தலைமை வகிப்பார். இந்த வைபவத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். கௌரவ விருந்தினராக மாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரதினி ஜுட் கலந்துகொள்வார்.

இந்த ஆண்டின் மகுட பாக்கியமாக 'வாழ்வதற்காக வாசிப்போம்' அமைகின்றது. இக்கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் ஆண்டின் பாடசாலை நூலக செயற்றிட்டம் செயற்படவுள்ளதென்று - மாகாண நூலக இணைப்பாளர் ந.அனந்தராஜ் அறிவித்துள்ளார். (எ)

## வாழ்த்துகின்றோம்



யாழ்.வீரசிங்க மண்டபத்தில்
இன்று 03.11.2002
பரதநாட்டிய அரங்கேற்றம் நிகழ்த்தவுள்ள
எம் பழைய மாணவி
செல்வி
ஸ்ரீரதி சந்திரராஜா
அவர்களை நாட்டிய உலகில் சிறப்புடன்
விளங்க வாழ்த்தி மகிழ்வடைகின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.
யாழ்/பொன்னாலை
வரதராஜப் பெருமாள் வித்தி. (10160)

# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி திரவியம்

வட்டுப் பிளவத்தையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இளையதம்பி திரவியம் அவர்கள் நேற்று (02.11.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பியின் அன்புப் மனைவியும் மீனாட்சி அம்மா, காலஞ்சென்றவர்களான தையல் நாகேஸ்வரி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), நித்தியானந்தன் மற்றும் இராஜேந்திரன், ஸ்ரீ புஸ்பகாந்தன், சர்வேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் சித்திரசேனன் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்), அரியநாயகம் (யாழ். பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்), நீலாம்பிகை, சியாமளா, கலாவதி, சோமசுந்தரம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சீக்காய் வயல்,*
*தொல்புரம்,*
*சுழிபுரம்.* (10249)

தகவல்:
ஸ்ரீ புஸ்பகாந்தன்
(மகன்)

## பொன்னையா இராசம்மா

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பருத்தித்துறை மாதனையை வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய பொன்னையா இராசம்மா அவர்கள் (31.10.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி - அன்னப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற முருகேசு பொன்னையாவின் அன்பு மனைவியும் சதாசிவம் (அமரர்), தெய்வானை (அமரர்), இரத்தினம் (கனடா), அழகம்மா (கனடா) ஆகியோரின் சகோதரியும் சத்தியமூர்த்தி (ஓய்வுபெற்ற படவரைஞர்), புண்ணியமூர்த்தி (ஜேர்மனி), கருணாகரமூர்த்தி (ஜேர்மனி), சரோஜினிதேவி, வனிதாதேவி (ஜேர்மனி), வசந்தாதேவி ஆகியோரின் தாயாரும் துவாரகாதேவி (அமரர்), சுசீலாதேவி (ஜேர்மனி), ரஞ்சனி, கோபாலகிருஷ்ணன் (நிலஅளவையாளர், சமாதான நீதிவான்), சச்சிதானந்தசிவம் (ஜேர்மனி), ஜீவானந்தம் (காயத்திரி நகைமாளிகை) ஆகியோரின் மாமியாரும் பகீரதன் (கப்பல் திணைக்களம்), ஸ்ரீகரன் (கனடா), கீதாஞ்சலி, சர்வேஸ்வரன் (நோர்வே), ஜானகிகிருஷ்டவான் (ஜேர்மனி), ஜெயாழினி, ஜெயச்செல்வி ரஞ்சன், ஜெயரேகா (NTS), ஜெயமாதுரி (ஜேர்மனி), பத்மப்பிரியா, பத்மதாரணி (ஜேர்மனி), கார்த்திகா, ஜெயகாயத்திரி, கௌதமன், காருண்யா (ஜேர்மனி), அச்சுதன் (ஜேர்மனி), ஜெகதா (ஜேர்மனி) பூமிகா (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2002) மாலை 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கேணியடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*"சேகண்டி",*
*மாதனை, பருத்தித்துறை.* (C/24696)

தகவல்:
பொ.சத்தியமூர்த்தி (மகன்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுப்பையா ஐயக்கோன்
திதி: 03. 11. 2002
மலர்வு: 16-08-1943 உதிர்வு: 15.10.2001
என்றும் உம் நினைவில்

என்றும் நினைவுடன்
மனைவி:ஐ.கமலாதேவி,
மகன்மார்:ஐ.உதயகுமார், கண்ணன்,
மகள்மார்:ஐ.நாகேஸ்வரி, பவானி,
மருமகன், மருமகள், பேரன், பேர்த்தி

18/3, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம். (10251)

## கண்ணீர் அஞ்சலி

### பொ.விவேகானந்தன்

*(அன்னா கோப்பி நிறுவனம், இணுவில்)*

1.11.2002 அன்று அமரத்துவம் அடைந்த அமரர் பொ.விவேகானந்தன் அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர், ஊழியர், அபிமானிகள் அனைவரது வேதனையில் பங்கு கொள்வதோடு, அவர்களது மன ஆறுதல்களுக்கும் அன்னாரது ஆன்மா ஈடேற்றத்திற்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

போஸ்கோ
இயக்குநரும், ஊழியர்களும்.
(C-24694)

## திருமண வாழ்த்து

இல்லற வாழ்வில் இன்று (03.11.2002)
இணையும் புதுமணத் தம்பதிகளான
சங்கரதாஸ் (B.A.Hons)
லதா (B.A.Hons)
பதினாறு செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம்
தரணியில் பெருமையுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
த.பிரதீஸ்வரன் (பிரதீஸ்)
த.சிறீஸ்கந்தராசா, திரு.கஜேந்திரன், எ.சிவா.
(10252)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

மின்சார நிலைய வீதியில்
உடுப்புகள் அடங்கிய
பை ஒன்று
கண்டெடுக்கப்பட்டுள்ளது.
உரியவர் ஆதாரம் காட்டி
கீழ் வரும் முகவரியில்
பெற்றுக் கொள்ளவும்.
சியானாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்,
இல. 77, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(10250)


ராஜா யாழ்ப்பாணம்.
இன்று முதல்
அஜித் (இருவேடங்களில்) மீனா நடித்த
வில்லன்
(ரீல்ஸ்)
கா.நே: 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)
(C-24610)

நிறஞ்சனாஸ் சங்கானை
M.G.R., சரோஜாதேவி, நம்பியார், நாகேஸ்
நடித்த
கலங்கரை விளக்கம்
காட்சிகள்: 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)
இரவு 8.45மணிக்கு ல
KILLER BABE FOR THE C.I.A.
(C-24617)

நாகம்ஸ் சுன்னாகம்
சூர்யா, ஸ்ருதிகா, விஜயகுமார்
நடித்த
ஸ்ரீ
காட்சிகள்: 11.00, 3.00, 6.30 (புதிய நேரம்)
(10234)

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவால் மீட்கப்பட்ட

# 7,000 வெடிபொருள்கள் தாளையடியில் அழிப்பு!

வவுனியா,நவ.3

பளை மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினால் மீட்கப்பட்ட ஷெல் மற்றும் மிதிவெடிகள் எதிர்வரும் 6ஆம் திகதி தாளையடிக் கடற்கரைப் பக்கத்தில் வைத்து செயலிழக்கச் செய்யப்படவிருக்கின்றன.

இந்தப் பிரதேசத்தில் இராணுவத்தால் புதைக்கப்பட்ட சுமார் 4 ஆயிரம் ஷெல்களையும் 3ஆயிரம் மிதிவெடிகளையும் தமது பிரிவினர் மீட்டுள்ளனர் என்றும் -

இந்த வெடிபொருள்களே தாளையடிக் கடற்கரைப் பகுதியில் வைத்து செயலிழக்கச் செய்யப்படவிருக்கின்றன என்றும் -

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் இணைப்பாளர் பி.யோகன் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் மிதிவெடிகளில் சிக்கி இதுவரை 12பேர் உயிரிழந்தனர் என்றும் 25பேர் காயமடைந்தனர் என்றும் அவர் மேலும் கூறினார். (ம-3)

## 18ஆம் திகதி அமைச்சர் மிலிந்த களுத்துறை சிறைக்கு செல்வார்

அமைச்சர் மிலிந்த மொறகொட, மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆகியோர் களுத்துறைக் கைதிகளைப் பார்வையிடுவதற்காக எதிர்வரும் 18ஆம் திகதி களுத்துறைச் சிறைச்சாலைக்குச் செலவுள்ளார்கள்.

களுத்துறைக் கைதிகள் கடந்த மாதம் உண்ணாவிரதம் இருந்த சமயம் இவர்களும் ஏனைய சில அமைச்சர்களும் கைதிகளுக்கு உறுதிமொழிகளை வழங்கி அவர்களின் உண்ணாவிரதத்தை முடித்துவைத்தனர்.

தாய்லாந்தில் நடைபெறும் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களின் பின்னர் கைதிகளைப் பார்வையிட வருவதாக அமைச்சர் மிலிந்த மொறகொட கைதிகளுக்கு உறுதியளித்திருந்ததன் பேரிலேயே இந்த விஜயம் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-12)

## தீர்வுக்கான அடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டிருக்கின்றது.

இந்த உபகுழுவின் பேச்சுக்களில் பங்குபற்றும் இரு தரப்புப் பிரதிநிதிகளினதும் தலைவர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அன்ரன் பாலசிங்கம் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் இடம்பெறுகின்றனர். அன்ரன் பாலசிங்கத்தினால் புலிகள் சார்பில் நியமிக்கப்படும் மற்றொருவரும் இக்குழுவில் சேர்த்துக்கொள்ளப்படுவார் என நேற்றைய பேச்சுக்களின் பின்னர் செய்தியாளர்களுக்குத் தகவல் வெளியிடுகையில் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டார்.

"தனித்தனியாகவும் ஒன்றிணைந்தும் இக்குழுவினர் கலந்து பேசி தமது நடவடிக்கைகளை மேற்கொள்வர். காலத்துக்குக் காலம் இந்த உபகுழுவின் கூட்டம் பல்வேறு இடங்களில் நடைபெறலாம்."- என்றார் ஜி.எல்.பீரிஸ்.

இந்த அரசியல் விவகார உபகுழு குறித்து அமைச்சர் ஹக்கீம் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

"இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படை விடயங்கள், பல்வேறு நாடுகளிலும் இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போன்ற பல்வேறு விடயங்களை இக்குழு ஆராயும். இது தொடர்பாக பல்வேறு தரப்பு நிபுணர்களையும் அழைத்து அவர்களின் கருத்துக்களையும் கேட்டறியும். தேவைப்பட்டால் பல்வேறு நாடுகளுக்கும் சென்று அங்குள்ள தீர்வு முறைமைகளையும் சட்ட வரைபுகளை ஆராயும்.

*கேள்வி:-* இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படை விடயங்களை ஆராய்வதற்கான ஆரம்பமாக இக்குழுவைக் கருதலாமா?

*ஹக்கீம்:-* அவ்வாறும் அதை அடையாளப்படுத்தலாம் என்றும் நான் நினைக்கிறேன். நிரந்தர தீர்வை எட்டுவதற்குரிய ஒரு வடிவத்தை அமைப்பதற்கான வாய்ப்புகளை ஆராய்வதே இக்குழுவின் நோக்கம். ஆனால் தீர்வு தொடர்பான ஒரு சட்ட வரைவை அடைவதற்கு நீண்ட காலம் பிடிக்கலாம். உடனடியாக நிறைவேறுகின்ற ஒரு விடயமல்ல இது.

வெவ்வேறு இடங்களிலும் நாடுகளிலும் உள்ள அரசியல் முறைமைகளையும், தீர்வு வழிகளையும் ஆராய்ந்து, பரிசீலித்து இடைக்கால நிர்வாகம், நிரந்தர தீர்வு ஆகியவை தொடர்பாக எந்தெந்த விடயங்களை எமது நாட்டின் தீர்வுக்காக உள்வாங்கலாம் என்பதை இந்த உபகுழு தீர்மானிக்கும் - என்றார் ஹக்கீம். (ஐ-உ)

## சைக்கிளோட்ட வீரர் செல்வராசா திடீர்மரணம்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை நடந்த யூனியன் - ஹென்றீஸ் அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் பிரதம மத்தியஸ்தராகப் பணிபுரிந்த ஐ.செல்வராசா (வயது -53) மயங்கி வீழ்ந்து மரணமானார்.

சுன்னாகம், மயிலணியைச் சேர்ந்த இவர் பிரபல சைக்கிளோட்ட வீரராவார். (ம-3)

## புனரமைப்புக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினரினதும் சார்பில் தற்போது சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றுபவர்களில் ஒவ்வொருவர் இரு தரப்பினராலும் இந்த உப குழுவுக்கு நியமிக்கப்படுவர்.

உப குழுவின் தலைமைச் செயலகம் கிளிநொச்சியில் இருக்கும். அதன் பணிப்பாளராக புலிகளினால் ஒருவர் நியமிக்கப்படுவார்.

அதேவேளை - முஸ்லிம் ஒருவரும் சிங்களவர் ஒருவரும் கூட இந்தச செயலகத்தின் பிரதிப் பணிப்பாளர்களாக நியமிக்கப்படுவார்கள்.

இதுவரை நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களில் இவ்வாறு தீர்மானிக்கப் பட்டிருப்பதாக அறியவந்துள்ளது. (ம)

## புதிய வரவு - செலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டு மக்களின் வறுமை ஒழிப்புக்கும் வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும் எமது அரசு முன்னுரிமை வழங்கியுள்ளது - என்றார்.

"முன்னைய ஆட்சியின் போது ஜனாதிபதியால் தயாரிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்ட உரைக்கான ஆவணங்கள் அடங்கிய பெட்டி, அத்திட்டம் நாடாளுமன்றத்தில் வாசிக்கப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னரே பிரதி நிதியமைச்சரிடம் கையளிக்கப்படும். அந்தப் பெட்டிக்குள் பூதமா பிசாசா உள்ளதென்பது அந்த பிரதி நிதியமைச்சருக்கு அதனை வாசிக்கும் வரை தெரியாது. முன்னைய அரசில் பிரதி நிதியமைச்சராக இருந்த பேராசியர் ஜி.எல்.பீரிஸ் வெளிப்படையாக இதைக் கூறியுள்ளார்" - என்றும் சொக்ஸி கூறினார்.

இம்முறை பிரதமர் மற்றும் அமைச்சரவையின் ஆலோசனைகளை ஏற்று நிதியமைச்சராகிய நான் சுயமாகவே வரவு - செலவுத் திட்டத்தை தயாரித்துள்ளேன். வரவு - செலவுத் திட்டம் அடங்கிய பெட்டியும் என்னிடமே உள்ளது.

புதிய வரவு - செலவுத் திட்டம் நடைமுறைக்கு வந்து ஆறு, ஏழு மாதங்களில் நாட்டை 94ஆம் ஆண்டு நிலைக்கு கொண்டுவர முடியும் என நம்புகின்றோம் - என்றார் அவர்.

வரவு - செலவுத் திட்டத்தின் எல்லா விவரங்களையும் கூறிவிட்டால் புதன்கிழமை சபையில் வெளியிடப்படும் வரவு - செலவுத் திட்டத்தில் உப்புச் சப்பு இல்லாமல் போய் விடும். எனவே புதன்கிழமைவரை சற்றுப் பொறுமையாக இருங்கள் என்று நகைச்சுவையுடன் கூறினார் நிதியமைச்சர் சொக்ஸி.

2002ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் போது நாம் முன்வைத்த ஆலோசனைகள் இம்முறை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் நிதி அமைச்சர் கூறினார். (ம-3)

## உயர் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பில் 9பேரும் இதில் அங்கம் வகிப்பர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ அரசு தரப்புக் குழுவுக்கு தலைவராக இருப்பார்.

அரசின் இராணுவத்தையும் புலிகளின் இராணுவத்தையும் சேர்ந்த மூத்த தலைவர்கள் இந்தக் குழுவில் ஒன்றாகக்கூடி பணியாற்ற இருப்பது மிக முக்கியமான விடயமாகும்.

அடிக்கடி பதற்றத்தை ஏற்படுத்தி வரும் சம்பவங்களைக் களைவதிலும் யுத்தநிறுத்த ஒப்பந்த ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதிலும் மிகவும் வரவேற்கத்தக்க அம்சம் இதுவாகும்.

அரசுதரப்புக் குழுவுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை தலைமை வகிக்க இலங்கை அரசு கோரியுள்ளது. அதன்மூலம் இந்த விடயத்தில் இலங்கை அரசுத்தரப்பு எவ்வளவு கரிசனை கொண்டுள்ளது என்பது தெளிவாகின்றது - என்றார் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ். (ம)

## திருமலையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் திருமலைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

திருகோணமலை நீதிவான் எஸ். தியாகேந்திரன் முன் பொலீஸார் அவர்களை ஆஜர் செய்தனர்.

சம்பூர் நோக்கிச் சென்ற படகை கடற்படையினர் மறித்துச் சோதனையிட்ட சமயம் அந்தப் படகில் 35 கிளைமோர்கள் மற்றும் தொலைத் தொடர்புக் கருவிகள் என்பன இருந்தன என்றும் -

அதன் பின்னர் அந்தப் படகில் இருந்த விடுதலைப் புலி உறுப்பினர்களைக் கைதுசெய்ததாகவும் -

பொலீஸார் நீதிவானிடம் தெரிவித்தனர்.

இதையடுத்து இவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ம-3-145)


ஈசன் கல்வி நிலையம்
கிராம சேவகர் போட்டிப் பரீட்சைக்கான வகுப்புக்கள்
Tue., Thu.:- 4.30 p.m. (ப.நே.)
திரு. தவசேகர் (B.Sc.)
ஆரம்பம்:- 05.11.2002 (Tue.)
(10219)



கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 23 . 03 . 1941



மறைவு 01 . 11 . 2002

துர்க்கா தொழிலகத்தின் அன்புமிகு அதிபர்
விவேகானந்தப் பெருந்தகையே!
உங்கள் பிரிவு உலுக்கியது எங்கள்
உள்ளங்களையன்றி உயிர்களையும்தான் ஐயா!
உங்கள் உத்தம ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்
அண்ணா தொழிலகம்,
அண்ணா விவசாயப் பண்ணை,
துர்க்கா என்ரபிறைசஸ்.
இணுவில். (10223)



அரசடி வீதி, கந்தர்மடம்.
இணைந்த கணிதம்
மின் ஒளியில்
சிக்கல் எண்கள்
Tue. 7.00 - 8.00 (p.m.)
Wed., Fri. 6.30 - 8.00 (p.m.) (புதிய நேரம்)
ஆரம்பம்: 05.11.2002 (10247)
By .செந்தில்நாதன் B.Sc.



பிரிவு II ஆரம்பமாகின்றது...
HARD WARE CLASSES
தொடர் செய்முறைப் பயிற்சிகள்...
Sat., Sun. 9 a.m. - 12 p.m.
Mon., Wen. 4 p.m. - 7 p.m.
D Solve in IBMS
நீலவு.Com
T.P.: 077 - 7740413
701, K.K.S. Road, Jaffna.
(C24680)



Career.Com. Institute
First time in Jaffna
CMA aat + EX= (CCCA) ஒரே நேரத்தில் குறைந்த செலவில்
CMA/aat மாணவர்களுக்கு சலுகைக் கட்டணத்தில் சர்வதேச TATA வின் EX(CCCA) Certified Course in Computerized Accounting கற்கை நெறி.
CMA - Foundation வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
aat - 2003 June வகுப்புகள் 09.11.2002 இல் ஆரம்பம்.
தொடர்பு: Career.Com. Institute 79, Main Street, Jaffna.
அலுவலக நேரம்:
Mon., Wed., Fri. 10 - 2
Sat., Sun. 9 - 4
(C24650)



தீபாவளியை முன்னிட்டு
மாபெரும்
பொன் மாலைப் பொழுது இசைநிகழ்வு
04.11.2002 தீபாவளி அன்று
பிற்பகல் 1.00 மணிக்கு - சாவகச்சேரி இந்துக் கல்லூரி
மாலை 6.00 மணிக்கு - பல்கலைக்கழக மைதானத்தில் மின்னொளில்
09.11.2002 சனி
மாலை 2 மணிக்கு நெல்லியடி ராஜலக்ஷ்மி திரையரங்கில்
இந்த இசை மழையில் நனைந்திட திரண்டு வாரீர்!
கலைப்பீட மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்.
(10180)



விற்பனையாளர் தேவை
மருந்து விற்பனை (பார்மஸி) மற்றும்
பன்ஸிப் பொருள்கள் விற்பனை (பன்ஸி)
அனுபவம் வாய்ந்த பெண் ஊழியர்கள் தேவை.
அனுபவமுள்ளோர் நேரில் வரவும்.
ரட்ணம் பார்மஸி
388, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(10102)



நலமான வாழ்வுக்கு என்றும் நலந்தருவது
புரோசிங் (PROZINC)
★ இழந்த சக்தியை மீட்டெடுத்தல்.
★ இரத்த உற்பத்தியை அதிகரித்தல்.
★ வளரும் பிள்ளைகளுக்கு பசி உணர்வை தூண்டுதல்.
★ போன்றவற்றில் முக்கிய பங்கு வகிப்பதுடன்
புரோசிங் - அனைத்து விற்றமின்களுடன் அதியுயர் தாவரப் புரதச்சத்து நிறைந்துள்ளதால் சைவப் பிரியர்களுக்கும் உகந்தது.
புரோசிங் - கர்ப்பிணித் தாய்மார், விளையாட்டு வீரர், வளரும் பிள்ளைகள், முதியோர் என முழுக் குடும்பத்தினருக்கும் ஏற்ற சிறந்த பானம்.
புரோசிங் - தற்போது யாழ்.நகரின் அனைத்து மருந்தகங்களிலும் கிடைக்கப்பெறும்.




தொடர்புகளுக்கு :
JEGAN PHARMACY - யாழ். நகர். Tel: 222 3191
ARKEM - கொழும்பு. Tel: 470290, 071-341956
(C-24528)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.11.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.